பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஐப்பசி 24 | சனிக்கிழமை 10.11.2018 | கதிர் 05

## இது ரகசியம் அல்ல!

கொழும்பு அரசியல் கள நிலைவரம் நாளொரு முடிவும் பொழுதொரு திருப்பமுமாக மாறிக்கொண்டிக்கிறது.

நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றினார்.

பக்கம் 02 »

# ஜனவரி 5 இல் பொதுத் தேர்தல்

நாடாளுமன்றத் தேர்தல் 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி நடத்தக்காபந்து அரசு திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வேட்புமனுக் கோரல் எதிர்வரும் நவம்பர் 19ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதிவரை கோரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றால் ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்பு இரத்துச் செய்யப்படாவிடின் இந்தத் திகதி சாத்தியமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரைவான தேர்தல் அறிவிப்பு வெளியாகிதால் தமிழ்க் கட்சிகளின்

### நவ. 19 முதல் வேட்புமனுக் கோரல்

கூட்டணி அமைப்புக்கள் பாதிக்கப்படும் என்று அறியமுடிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போதைய நிலையில் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டாலும் ஏனைய தமிழ்க் கட்சிகள் கூட்டணி அமைப்பது பாதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது

## பெரும்பான்மை கிட்டாத இயலாமையால் சட்டத்தைக் கையில் எடுத்தார் ஜனாதிபதி



கொழும்பு, நவம்பர் 10

நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்குப் பகிரதப் பிரயத்தன முயற்சி எடுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அது கிட்டாமல் போன இயலாமையால் வேறுவழியின்றிச் சட்டத்தைக் கையில் எடுத்து நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அறிவிப்பை நேற்று நள்ளிரவு விடுத்தார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்றிரவு ஜனாதிபதியால் கையொப்பம் இடப்பட்டு அரச அச்சகக் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பக்கம் 11 »

## அமைதியாக இருக்க இந்திய அரசு முடிவு



புதுடில்லி, நவ. 10

இலங்கை அரசியல் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக இந்திய வெளிவிவ

பக்கம் 11 »

## பாதுகாப்பு அமைச்சு வசமானது பொலிஸ்

கொழும்பு, நவ. 10

இலங்கை பொலிஸ்துறை மீண்டும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக,

பக்கம் 11 »

## மைத்திரி இன்று விசேட உரை

கொழும்பு, நவ. 10

நாடாளுமன்றத்தை நேற்று நள்ளிரவு அதிரடியாகக் கலைத்த ஜனாதிபதி மைத்திரிபால, நாட்டு

பக்கம் 11 »

## அரச அச்சகத்துக்கு அதிக பாதுகாப்பு

கொழும்பு, நவ. 10

அரச அச்சகக் கூட்டுத்தாபனத்துக்கு திடீரெனச் சிறப்பு அதிரடிப் படைப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரச அச்சகத்

பக்கம் 11 »

## இலங்கையின் எதிர்காலத்தை நிறுவும் வாய்ப்பு மக்களிடம்

### கூறுகிறார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, நவ. 10

தலைவர்கள் என்ற வகையில், இலங்கையின் வருங்காலத்தின் மீது மக்கள் தங்கள் கருத்துக்களை முன்வைப்பதற்கான வாய்ப்பு

பக்கம் 11 »

## ஜனநாயகத்தை மீட்க வாருங்கள் மக்களே!

### அழைக்கிறார் மங்கள

கொழும்பு, நவ. 10

ஜனநாயகத்தை மீட்டெடுக்க மக்கள் அனைவரையும் ஒன்றிணையுமாறு ஐக்கிய தேசிய கட்சி

பக்கம் 11 »

## இலங்கையின் தலைவிதியை தீர்மானிக்கும் தருணம் இது!

### கோட்டாபய கருத்து

கொழும்பு, நவ. 10

மிகவும் இக்கட்டான நிலையில் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முக்கிய வகிபாகத்தை

பக்கம் 11 »

## நாடாளுமன்றைக் கலைக்கும் முடிவை உயர்நீதிமன்று மூலம் முறியடிப்போம்

### சுமந்திரன் திட்டவட்டம்

கொழும்பு நவ. 10

நாடாளுமன்றம் சட்ட விரோதமாகக் கலைக்கப்பட்டால் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்துக்குப் போவோம். அது தொடர்பான அரசமைப்பு ஏற்பாடு

பக்கம் 11 »

## காலை ஒருவர், மாலை ஐவர் அமைச்சர்களாக பதவியேற்பு



கொழும்பு, நவ. 10

மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னர், அமைச்சர்கள் நாளாந்தம் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

நேற்றுக் காலை விமல் வீரவன்ஸ

பக்கம் 02 »

## ஹக்கீம் – றிஷாத் மக்காவில் பேச்சு கொழும்பு அரசியலில் பரபரப்பு



கொழும்பு, நவ. 10

அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் மக்காவில்

பக்கம் 11 »

## 'நான் திரும்பி வந்திட்டேன்னு சொல்லு'

### யாழ்ப்பாணத்தில் கூறினார் டக்ளஸ்




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 10

நடிகர் ரஜனி பாணியில் நான்திரும்பிவந்திட்டேன்னு சொல்லு என கூறியுள்ள முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதிகாரி

பக்கம் 11 »

## மைத்திரிபாலவுக்கு எதிரான பிரேரணையை ஆதரியோம்!

### மனோ கணேசன் திட்டவட்டம்

கொழும்பு, நவ. 10

தமிழ் முற்போக்குக் கூட்டணி ஜனநாயகத்தை மதிக்கும், சிறந்த கொள்கையுடைய கட்சியான படியால், மஹிந்த ராஜபக்ஷவுக்கு பின்வாசல் வழி

பக்கம் 11 »

காலைக்கதிர் Kalaikkathir



# சர்வதேசத்தைப் பகைத்துவிட்டு முன்னோக்கிச் செல்ல முடியாது

## இராதாகிருஷ்ணன் கூறுகிறார்



ஹற்றன், நவ. 10

சர்வதேசத்தை பகைத்துக் கொண்டு இலங்கை ஒருபோதும் முன்னோக்கி பயணிக்க முடியாது என்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைதொடர்பில் மலையக மக்களுக்கு தெளிவுபடுத்தும் கூட்டம் ஒன்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது.

ஹற்றன் டி.கே.டபிள்யூ மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை குறித்த கூட்டம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

இன்று இந்த நாட்டில் அரசியலில் ஜனநாயகத்திற்கு விரோதமான பல செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றது. அந்த அனைத்து செயல்பாடுகளையும் மலையக மக்களாகிய நாங்கள் முழுமையாக எதிர்ப்பு தெரிவிக்கின்றோம்.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அன்று ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவிற்கும் பிரதமராக ரணில் விக்ரமசிங்கவிற்கும் அவர் தலைமையிலான ஒரு அரசை முன்னெடுப்பதற்கும் மலையக மக்கள் தங்களுடைய வாக்குகளை வழங்கினார்கள். ஆனால் இன்று அந்த வாக்குகளுக்கு விரோதமான செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ தனித்தனியாக முடிவுகளை எடுக்க முடியாது. அதற்காக மக்கள் தங்களுடைய வாக்குகளை வழங்கவில்லை. அவர்கள் இருவரும் இணைந்து இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காகவே அவர்களுக்கு மலையக மக்கள் ஒற்றுமையாக வாக்களித்தார்கள்.

இன்று அந்த மக்கள் அளித்த வாக்குகளுக்கு எதிராக ஜனாதிபதி செயல்படுகின்றார். இந்த மக்கள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இவர்கள் இருவரும் தனித்தனியே பிரிந்து சென்று அரசாங்கத்தை முன்னெடுப்பதற்கு அல்லது அரசாங்கத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்காக இன்னுமொரு புதிய பிரதமராக நியமிப்பதற்கு மக்கள் தங்களுடைய ஆணை வழங்கவில்லை.

எனவே அன்று கூறியதை போல எத்தனை பிரச்சனைகள் வந்தாலும் அவற்றை பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொண்டு இந்த நல்லாட்சி அரசாங்கத்தை முன்கொண்டு செல்ல வேண்டும் என்பதை இந்த ஜனாதிபதி மறந்து செயல்படுவது எங்களுக்கு மிகவும் கவலையளிக்கின்றது.

ஒரு நாட்டின் பொறுப்புள்ள தலைவராக அவர் எடுக்கின்ற முடிவுகள் இன்று எத்தனை பாதிப்புகளை நமக்கு ஏற்படுத்தி இருக்கிறது. சர்வதேச ரீதியாக எங்களுடைய நாடு பல பின்னடைவுகளை சந்தித்திருக்கின்றது. பல மேற்குலக நாடுகள் எங்களுடைய இந்த செயல்பாடுகளைப் பார்த்து தாங்கள் செய்ய முன்வந்த உதவிகளை கூட நிறுத்தி வைத்திருக்கிறன.

சர்வதேசத்தை பகைத்துக் கொண்டு இலங்கை ஒருபோதும் முன்னோக்கி பயணிக்க முடியாது என்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் – என்றார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*“நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைக்கும் எண்ணம் எனக்கு இல்லை. ஆனால் வேறு வழி இல்லாவிட்டால் அதுதான் ஒரே மார்க்கம். நாடாளுமன்றம் முற்கூட்டியே கலைக்கப்பட்டால் முதல் தடவையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான எம்.பிக்கள் ஓய்வூதியம் பெறும் வாய்ப்பை இழப்பர். எனவே அத்தகைய எம்.பிக்கள் அதனைப் புரிந்து கொண்டு எனது அரசியல் திட்டத்துக்கு ஆதரவு தரவேண்டும். இல்லையேல் அவர்கள் ஓய்வூதியத்தை இழக்கும் நிலைமைதான் வரும்”* – இப்படி சாரப்பட எச்சரிக்கை விடுக்கும் பாணியில் அங்கு உரையாற்றினார் ஜனாதிபதி மைத்திரிபால.

அதையடுத்து, சில நாள்கள் அடங்கியிருந்த நாடாளுமன்றக் கலைப்புப் பற்றிய பேச்சு மீண்டும் முழு அளவில் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இறக்கை கட்டிப் பறக்கத் தொடங்கியுள்ளது.

இதற்கிடையில், மஹிந்த தரப்பிடமிருந்து ரணில் தரப்புக்கு விசேட செய்தி ஒன்று அனுப்பப்பட்டிருப்பதாகவும், இரு தரப்புகளும் சேர்ந்து பொதுவான ஒருவரைப் பிரதமராகத் தேர்வுசெய்து அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் வரை அரசைக் கொண்டு செல்லலாம் என்றும் அந்தச் செய்தியில் யோசனை கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு தரப்புகளும் சேர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஓரங்கட்டுவது பற்றியும் அதில் பிரஸ்தாபிக்கப்பட்டதாம்.

மஹிந்தரின் சகோதரர் ஒருவரே இந்தச் செய்தியை ரணிலிடம் நேரில் தெரிவித்தார் என்றும், மஹிந்தருக்கு நெருக்கமான தமிழ்ப் பிரமுகர் ஒருவர் வீட்டில் ரணிலுக்கும் மஹிந்தரின் சகோதரருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது என்றும் கூட அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

சம்பந்தப்பட்ட தரப்பிடம் நேரடியாகக் கேட்டுவிடுவது நல்லது என்று கருதி எனது நண்பரான அந்தத் தமிழ்ப் பிரமுகருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு ரணிலுக்கும் மஹிந்தரின் இன்னை சகோதரருக்கும் இடையில் சந்திப்பு நடந்ததாமே, உண்மையா என்று கேட்டேன்.

அவர் மழுப்பலாக அப்படி சந்திப்பு நடக்குமா என்று என்னிடம் திருப்பிக் கேட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், மஹிந்த ராஜபக்ஷவும் சந்திப்பார்களா என்று ஒரு மாதத்துக்கு முன்னர் நீங்கள் கேட்டிருந்தால் நானும் இப்படித்தான் திருப்பி வினா தொடுத்திருப்பேன், ஆனால் கீரியும் பாம்புமாக இருந்த மைத்திரியும் மஹிந்தவும் தோளில் கைபோட முடியும் என்றால் மஹிந்தரும் ரணிலும் ஏன் அணி சேரமுடியாது என நான் திருப்பி வினாவெழுப்பினேன். அவர் பதில் கூறாமல் மலைத்தார்.

*“ரணில் – மஹிந்த சகோதரர் சந்திப்பு நடந்ததா என்பதை என்னால் ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை. ஆனால் மஹிந்த தரப்பிடமிருந்து ரணிலுக்கு ஆக்கபூர்வமான செய்தி ஒன்று அனுப்பப்பட்டிருப்பது உறுதியானது. தற்போதைய அரசியல் நெருக்கடியிலிருந்து வெளி வருவது மட்டுமல்ல, பல பிரச்சினைகளுக்கும் அதனால் தீர்வு கிட்டலாம். மேற்குலகைப் பகைக்கும் நிலையையும் தவிர்த்துக்கொள்ளலாம். ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான் தனிமைப்படுத்தப்பட்டுவிடுவார்”* – என்று நன்கு விடயமறிந்த மூத்த ஆங்கில ஊடகவியலாளர் கருத்து வெளியிட்டார்.

தமக்கு மாற்றான தரப்புகள் தனக்கு எதிராக ஒன்று திரளுகின்றமையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உணர்ந்தால் சட்டத்தில் இடமிருக்கின்றதோ, இல்லையோ நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுத்தான் அவர் மறுவேலை பார்ப்பார். ஆனால் அப்படிக் கலைப்பது அவருக்கு கடும் எதிரான நடாளுமன்றம் ஒன்று புதிதாக உருவாக வழிவகுக்கும் எனவும் அந்த ஊடகவியலாளர் மேலும் கூறினார்.

இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் அடுத்து வரும் நாள்கள் மிக முக்கிய தினங்களாக அமையலாம். பொறுத்திருந்து பார்ப்போம்.

- மின்னல்.

## காலை ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சராகப் பதவியேற்ற நிலையில், நேற்று மாலை மேலும் ஐந்து அமைச்சர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவியேற்றனர்.

நேற்று நள்ளிரவு நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையிலும் அமைச்சர்கள் நியமனமும் அவசர அவசரமாக இடம் பெற்றது.

விமல் வீரவன்ஸ – வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சர்.

உதயகம்மன்பில – புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சர்

எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா – நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சர்

எஸ்.எம் சந்திரசேன – பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ – வர்த்தகம் மற்றும் வணிக அமைச்சர்

சி.பி. ரத்நாயக்க – தபால் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சர். (ஐ)

# மீண்டும் அமைச்சராக வருவேன்

## ஹற்றனில் திகாம்பரம் சூளுரை



மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சராக மீண்டும் நான் வருவேன் என முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைதொடர்பில் மலையக மக்களுக்கு தெளிவுபடுத்தும் கூட்டம் ஒன்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது.

ஹற்றன் டி.கே.டபிள்யூ மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இந்தக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் யார் பிரதமராக வந்தாலும் சரி, ஜனாதிபதியாக வந்தாலும் சரி நாங்கள் இணைந்து மக்களுக்காக சேவை செய்யத் தயாராக இருக்கின்றோம். ஆனால் திடீர் என நாட்டின் ஜனாதிபதி, புதிய பிரதமர் ஒருவரை நியமித்ததை எங்களால் ஏற்று கொள்ள முடியாதுள்ளது.

எங்களுக்கு கோடிகணக்கான அழைப்புகள் வந்தது. ஆனால் தமிழ் முற்போக்குக் கூட்டணி நிதானமாக சிந்தித்து முடிவெடுத்துள்ளோம். நான் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் எவரும் செய்யாத வேலை திட்டங்களைச் செய்து காட்டி இருக்கின்றோம்.

கடந்த மூன்று வருடங்களாக இல்லாத அமைச்சு பதவியைப் பெற்றுக் கொண்டு பெயர்பலகைகளை மாற்றியுள்ளார். அவருக்குப் பெயர்ப் பலகைகளை மாத்திரம் மாற்ற முடியும். ஆனால் அவருக்கு வேறு ஒன்றும் செய்ய முடியாது.

ஆனால் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளராக இருந்தவர் ஒரு நாடகத்தை ஆடிவிட்டு எங்கள் எல்லோரையும் காட்டிக் கொடுத்து விட்டார். ஆனால் தமிழ் முற்போக்கு கூட்டணி என்றுமே யாரையும் காட்டி கொடுக்காது.

2015ம் ஆண்டுக்கு பிறகு நான் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் வழங்கிய நியமனங்களை இரத்து செய்யுமாறு தற்போது உள்ள புதிய அமைச்சர் கூறுகிறார். ஆனால் மக்கள் யாரும் பயப்படவேண்டிய தேவையில்லை. 15ஆம் திகதிக்கு பிறகு மீண்டும் நான் வருவேன் – என்றார். (ஐ)

# வெளிநாட்டு ஊடகவியலாளர்களால் மூக்கறுபட்டார் அமைச்சர் அமுனுகம

கொழும்பு, நவ. 10

வெளிவிவகார அமைச்சர் சரத் அமுனுகம நேற்று முற்பகல் 10.30 ஏற்பாடு செய்திருந்த வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கான ஊடக சந்திப்புக்கான அழைப்பை வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சங்கம் நிராகரித்துள்ளது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி பதவிக்கு வந்த அரசை எந்த நாடும் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்காத நிலையில் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சங்கம் என்ற வகையில் தம்மாலும் எந்த வகையிலும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொள்ள முடியாது என வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சங்கம் என்ற வகையில் தாம் இவ்வாறான ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டால், அரசை அங்கீகரித்துள்ளதாக அர்த்தப்படுத்தப்படும். அப்படி நடந்தால், அது தமது சங்கத்தின் நற்பெயருக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால், வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் வரையறுக்காது பொதுவாக அனைத்து ஊடகங்களுக்கும் நடத்தப்படும் பொது ஊடக சந்திப்பு தொடர்பான செய்திகளைச் சேகரிக்க தாம் தயாராக இருப்பதாகவும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சங்கம் தெரியப்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

# அமைச்சரவையை தக்கவைத்துக் கொண்டே நாடாளுமன்றைக் கலைத்தார் மைத்திரிபால

## அவரின் தரப்பினர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 10

புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சரவையை தக்கவைத்துக் கொண்டே ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைத்தார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர் மகிந்த யாப்பா அபயவர்த்தன தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை வரும் நாடாளுமன்றத் தேர்தல்வரை நடைமுறையில் இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

மக்களின் தீர்ப்பைப் பெறுவதற்காகவே ஜனாதிபதி இந்த முடிவுக்கு வந்ததாகக் குறிப்பிடும் அமைச்சர் மகிந்த யாப்பா அபயவர்த்தன, அரசியலமைப்புக்கு அமைவாகவே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தை கலைத்த ஜனாதிபதியின் செயல் சட்டவிரோதமானது, அரசமைப்புக்கு எதிரானது என்று ஐக்கிய தேசிய கட்சி கீச்சகத்தில் பதிவிட்டுள்ளது.

நாட்டில் ஜனநாயகத்தின் மேன்மையை உறுதிசெய்யும் வகையில் இதை எதிர்த்து நாங்கள் போராடுவோம் என்றும் அந்த கீச்சகப் பதிவில் ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# கூட்டமைப்பு, முஸ்லிம் கட்சிகளை உடைத்து ஆட்சியைப் பிடிப்போம்

## அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க இறுமாப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது 4 பிரிவுகளாகப் பிளவு பட்டிருப்பதால், அவர்களில் சிலரை எங்களின் பக்கம் கொண்டுவரலாம் என்று அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பெரும்பான்மை உறுப்பினர்களுடனே எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் செல்வோம். நாடாளுமன்றத் தேர்தலுக்கோ அல்லது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்கோ செல்லமாட்டோம். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைத் தற்போது நாங்கள் கொண்டிருக்கிறோம். அதனை எதிர்வரும் 14 ஆம் திகதி நிரூபிப்போம். எங்களில் தற்போது 105 பேர் இருக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சிக்கு 97 பேர் மாத்திரமே இருக்கின்றனர். நாங்கள் தான் பெரும்பான்மையாக இருக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது 4 பிரிவுகளாக பிளவு பட்டிருக்கின்றது. அதனால் அவர்களில் சிலரை எங்கள் பக்கம் திருப்பிக் கொள்ளலாம். அதேபோன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ரிஷாத் பதியுதீனின் கட்சி எங்களுடன் கலந்துரையாடி வருகின்றது. அவர்களின் கட்சியில் இருந்து உறுப்பினர்களை தனித்தனியாகப் பிரித்து எடுக்கலாம். என்றாலும் கட்சிகளைப் பிளவுபடுத்துவது எமது நோக்கமல்ல. அவர்கள் கூட்டாகத் தீர்மானம் எடுக்க இருப்பதால் நாங்கள் அவர்களில் கைவைக்கவில்லை. தேவை ஏற்படின் அவர்களிலும் கைவைப்போம்–என்றார். (ஐ)

## 14 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட ஐ.நாவின் அழுத்தமே காரணமாம்

கொழும்பு, நவ. 10

ஐ.நா செயலாளர் நாயகத்தின் கோரிக்கைக்கு மதிப்பளித்து இரண்டு நாட்களுக்கு முன்பதாக நாடாளுமன்றத்தைக் கூட்ட ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என்று நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாடாளுமன்றத்தில் அரசின் பெரும்பான்மையை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தேவையான சந்தர்ப்பத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியும்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜயவர்த்தன 7 தடவைகளும், ஆர்.பிரேமதாஸ நான்கு தடவைகளும், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஐந்து தடவைகளும், மஹிந்த ராஜபக்ஷ ஐந்து தடவைகளும் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்துள்ளார்கள். நாடாளுமன்றத்தைக் குறைந்த தடவைகள் ஒத்திவைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டுமே– என்றார்.(ஐ)

## அரசமைப்பை மீறினாராம் மைத்திரி; அவரது விக்கிப்பீடியாவே கூறுகிறது

கொழும்பு, நவ. 10

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விக்கிப்பீடியா பக்கத்தில் கடந்த 24 மணித்தியாலயங்களுக்குள் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 2018ஆம் ஆண்டு இலங்கையின் அரசமைப்பு மீறலால் நெருக்கடிக்குக் காரணமானவர் என்ற விடயம் இணைக்கப்பட்டுள்ளது.

புகாரி சயிட் என்ற நபரே இந்தச் சீராக்கத்தைச் செய்துள்ளார் என்று விக்கிப்பீடியா தெரிவித்துள்ளது.

சர்வதேச ரீதியில் மைத்திரிபால சிறிசேனவால் அரசமைப்பு மீறல் இடம்பெற்றது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் விக்கிப்பீடியா இந்தச் சீராக்கத்துக்கு அனுமதியளித்துள்ளது.(ஐ)



Maithripala Sirisena

Pallewatte Gamaralalage Maithripala Yapa Sirisena (pronounced [pallewattə gaməraːləlaːgeː majtriːpaːlə jaːpaː siriseːnə]; Sinhalese: මෛත්‍රීපාල සිරිසේන; Tamil: மைத்திரிபால சிறிசேன; born 3 September 1951) is a Sri Lankan politician and the 7th and current President of Sri Lanka, in office since January 2015.[2][3] He is regarded as the instigator of Sri Lanka's 2018 Constitutional Crisis. [4][5]

His Excellency
Maithripala Sirisena
මෛත්‍රීපාල සිරිසේන
மைத்திரிபால சிறிசேன



## வவுனியாவில் ஆணின் சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்பு

வவுனியா, நவ. 10

வவுனியா, மடுகந்தைப் பகுதியில் இனந்தெரியாத ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மடுகந்தை, மயிலங்குளம் பகுதியிலுள்ள குளத்தில் உருக்குலைந்த நிலையில் சடலமொன்று காணப்பட்டுள்ளது. அவ்வழியாக சென்ற இளைஞன் ஒருவர் இதனைக் கண்டுள்ளார்.

இது தொடர்பில் மடுகந்தைப் பொலிஸாருக்கு பொதுமக்களால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சடலத்தை பார்வையிட்டதுடன், கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் அந்த ஆண் உயிரிழந்திருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிட்டனர்.

உயிரிழந்தவர் தொடர்பாக தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை எனவும், அவர் 45 வயது முதல் 55 வயதிற்குட்பட்டவராக இருக்கலாம் எனவும் பொலிஸார் கூறினர்.(ஐ)

## மக்கள் விரோத ஆட்சிக்கு இடமளிக்கவே முடியாது



நாட்டில் கடந்த 2015ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மாற்றம் இப்போது முற்றாகத் தலைகீழாகத் திரும்பவும் மாறியிருக்கின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

மாதுளுவாவே சோபித தேரரின் நினைவுநாள் நிகழ்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை கொழும்பு புதிய நகரமண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட ஒரு முக்கியமான இயக்கம், அதன் மூலமாகத்தான் இந்த நாட்டிலே ஜனவரி 8ஆம் திகதி 2015ஆம் ஆண்டு ஒரு மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

அந்த மாற்றம் இப்போது முற்றாகத் தலைகீழாகத் திரும்பவும் மாறியிருக்கின்றது. எந்த அரசை மாற்ற வேண்டும் என்று நாங்கள் முயன்றோமோ? அந்த அரசை மீளவும் கொண்டுவரும்– குறிப்பாக பின்கதவால் கொண்டு வரும் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

ஆகவே அதைத் தடுப்பதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு மாத்திரமே காணப்படுகின்றது. ஆகையினால்தான் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டிப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கின்றதா இல்லையா என்பதைச் சோதித்துப் பார்க்கவேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு. ஜனாதிபதி பிரதமரைப் பதவி நீக்கியதும் இன்னொருவரை நியமித்ததும் அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானது.

ஆகையால் சட்டவிரோதமாகச் செய்யப்பட்ட இந்த நடவடிக்கையை எதிர்த்து நாங்கள் வாக்களிப்போம்–என்றார்.(ஐ)

## அரசமைப்பு மாற்றத்தின் மூலம் தமிழருக்கு விமோசனமில்லை

### சாடுகின்றார் சிவமோகன் எம்.பி.



வவுனியா, நவ. 10

இலங்கையில் அரசியல் யாப்பை மீறி சில விடயங்கள் அரங்கேறி வருகின்ற நிலையில், அரசியல் யாப்பு மாற்றத்தால் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் விமோசனம் கிடைக்கப்போவதில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் தெரிவித்தார்.

அத்தோடு, இலங்கையின் அரசியல் யாப்பு என்பது ஒரு மோசடித் தனமான அரசியல் யாப்பு என்றும் அவர் குறிப்பிட்டார்.

மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தா.சிவசிதம்பரத்தின் 26ஆம் ஆண்டு நினைவுதினம் வவுனியாவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டபோதும், அதிலுள்ள சில சரத்துக்களை வைத்துக்கொண்டு இரு தரப்பினரும் இன்று வியாக்கியானம் செய்துகொண்டிருக்கின்றனர்.

13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பின்னர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பறிக்கப்பட்டன.

மகாவலி அபிவிருத்திச் சபை என்ற ஒரு சபையால் அரசமைப்பை மீற முடியும் என்ற நிலைப்பாடு இருந்தால், தமிழர்களுக்கான தீர்வு அரசியல் யாப்பினால் கிடைக்கப்போவதில்லை. போராடி அவற்றை பெற்றுக்கொள்ளும்வரை பிரச்சினைகள் தொடரும்–என்றார்.(ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நாடாளுமன்றைக் கலைக்க ஜனாதிபதி தரப்பு முடிவு?

தாம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்த போது தமக்குத் தேவைப்பட்ட போதெல்லாம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டக் கூடிய வல்லமை பெற்றிருந்த மஹிந்த ராஜபக்ஷ, இப்போது பிரதமர் பதவியை பொறுப்பேற்ற பின்னர் சாதாரண அறுதிப் பெரும்பான்மைக்குத் தேவையான உறுப்பினர்களைக் கூட நாடாளுமன்றத்தில் திரட்ட முடியாது அல்லாடுகின்றார்.

ஜனாதிபதியாக இருந்தபோது தமக்கு வசதியாக அரசமைப்பை மாற்றுவதற்குத் தேவையான நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைக் குதிரைப்பேரம் மூலம் அவரால் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அதைப் பயன்படுத்தியே, தாம் அப்போது வகித்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்குரிய அதிகாரங்களைக் கட்டுமட்டில்லாமல் அதிகரிப்பதற்கு வழி செய்யும் அரசமைப்பின் 18 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் வெற்றிகரமாக அவரால் நிறைவேற்ற முடிந்தது.

பின்னர் அவரை வீழ்த்திப் பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேனவினாலும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசினாலும் அந்தப் பதவிக்குரிய அதிகாரங்கள் மீள வெட்டிக் குறைக்கப்பட்டன என்பது பின்னர் நடந்த விவகாரம்.

ஆனாலும் இப்போது மீண்டும் பிரதமர் பதவியை ஏற்று இரண்டு வாரங்கள் கடந்த நிலையிலும் நாடாளுமன்றப் பெரும்பான்மையை ஈட்ட முடியாத இக்கட்டிலேயே மஹிந்த ராஜபக்ஷ உள்ளார் என்பது துலாம்பரமாகி வருகின்றது.

புதிய பிரதமர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிடும் கருத்துக்களை நோக்கும் போது ஒரு சினிமாப் படத்தில் வடிவேலு கூறும் *'என்ன எல்லாம் ஒரே சின்னப்பிள்ளைத் தனமாக இருக்கின்றது'* என்ற வாசகம்தான் நினைவுக்கு வருகின்றது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் பெறக்கூடியவர் எனத் தாம் கருதும் ஒருவரையே பிரதமராக ஜனாதிபதி நியமிக்க வேண்டும் என்பதே அரசமைப்பு ஏற்பாடு. அதுதான் அரசியில் மரபு முறையும் கூட.

தனக்குப் பிடித்தமானவர், தமக்கு விருப்பமுடையவர், தம்முடன் சேர்ந்து பணியாற்றக் கூடியவர் என்று பார்த்து வழங்கும் நியமனம் அல்ல அது.

ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அப்படிப் பார்த்துத் தான் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நியமனம் வழங்கினார் என்று கூறுவதன் மூலம் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக இந்த நாட்டின் மக்கள் வழங்கிய ஆணையைக் கிள்ளுக் கீரையாக்கி – தூசாகக் கருதி –அவர் தூக்கி எறிந்திருக்கின்றார் என்றே கூறவேண்டும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்களின் ஆணை மிகவும் தெளிவானது, வெளிப்படையானது.

எவ்வாறு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாலரை லட்சத்துக்கும் அதிகமான – மேலதிக வாக்குகளினால் மைத்திரிபால சிறிசேனவுக்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்குரிய ஆட்சியதிகாரத்துக்கு மக்கள் ஆணை வழங்கினார்களோ, அதேபோன்று நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டுக்கும் மக்கள் அங்கீகாரம் வழங்கினார்கள்.

அந்த அதிகாரத்தை – ஆணையை – எதேச்சாதிகாரமாக, தம்மிஷ்டப்படி, தூக்கிக் கடாசியிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

2015 ஒகஸ்ட் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் அளித்த ஆணைப்படி, இப்போதும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவை ரணில் விக்கிரமசிங்க தக்க வைத்திருக்கின்றார் என்பதே பொதுவான அபிப்பிராயம்.

இதனைப் பரீட்சித்து முடிவு செய்வதற்கான களம் – சரியான தளம் – நாடாளுமன்றம்தான். அங்கு மக்கள் பிரதிநிதிகளை வாக்கெடுப்புக்கு அனுமதிப்பதன் மூலம் உண்மையைக் கண்டறிந் தால், தற்போதைய அரசியல் நெருக்கடி சுமுகமாகத் தீர்ந்து விடும்.

ஆனால், தம்முடைய அரசியல் நோக்கங்களை எட்டுவதற்காக – தமது விருப்பப்படியான அரசியல் நிகழ்ச்சி நிரலைக் கொண்டு நடத்துவதற்காக – நாடாளுமன்ற செயற்போக்கையே குழப்பியடித்து, தேவையைற்ற நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அவரது தரப்பினரும் சரியான தளத்தில் பிரச்சினையை எதிர் கொள்ள மறுத்து வருகின்றனர்; பின்னடித்து நிற்கின்றனர்.

நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பை முன்னெடுக்க அனுமதித்தால் தமது அரசியல் சித்து விளையாட்டின் 'பொட்டுக்கேடு' அம்பலமாகி விடும் என அஞ்சும் மைத்திரி – மஹிந்த கூட்டு அதனால் நாடாளுமன்றில் நம்பிக்கை வாக்களிப்புக்கு இடமளிக்காமல் நாடாளுமன்றத்தைக் கலைத்து அரசியல் போக்கைத் தமக்குச் சாதகமாக மாற்றும் எத்தனத்தில் குதித்திருப்பதாகத் தெரிகிறது.

நாடாளுமன்றைக் கலைக்கும் அதிகாரம் தமக்கு இல்லாதபோதும் அரசமைப்பையும் சட்டத்தையும் மீறி அச்செயலை ஜனாதிபதி தரப்பு முன்னெடுத்தால் உயர்நீதிமன்றமும் தேர்தல் ஆணையமும் அதைத் தட்டிக் கேட்கும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

## வவுனியாவில் டக்ளஸுக்கு வரவேற்பு



வவுனியா, நவ. 10

புதிய அரசில் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் இந்துவிவகார அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நேற்று முற்பகல் வவுனியா மாவட்டத்தில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

வவுனியா வரவேற்பு வளைவு மண்டபம் முன்றலில் பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து வவுனியா மக்களால் வரவேற்கப்பட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மோட்டார் சைக்கிள் பவனி ஊர்வலமாக பிரதான வீதி வழியாக வவுனியா வைரவப் புளியங்குளம் ஆதிவிநாயகர் கோவிலடி வரை அழைத்து வரப்பட்டார். அங்கு அமைச்சருக்கு ஆசி வேண்டி சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

அதன் பின்னர் அங்கிருந்து அழைத்து செல்லப்பட்ட அமைச்சர் டக்ளஸ் வவுனியா பிரதான பள்ளிவாசலில் நடைபெற்ற தொழுகை நிகழ்வுகளில் கலந்துகொண்டார். (ஐ)

## வவுனியாவில் கொட்டுகிறது மழை பாவற்குளத்தின் நீர்மட்டம் உயர்வு



வவுனியா, நவ. 10

வவுனியாவில் கடந்த சில நாள்களாகத் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக பாவற்குளத்தின் நீர்மட்டம் சடுதியாக உயர்வடைந்துள்ளது எனப் பிரதேசநீர்ப்பாசனப் பொறியியலாளர்ரி.சுகந்தலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் கடந்த ஐந்து நாள்களாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாகத் தாழ் நிலப் பகுதிகளில் நீர் தேங்கியுள்ளதுடன், குளத்து நீர்மட்டமும் சடுதியாக உயர்வடைந்துள்ளது.

மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் காணப்படும் வவுனியா, பாவற்குளத்தின் நீர்மட்டம் 15.6 அடியாக உயர்வடைந்துள்ளது. அத்துடன் ஈரப் பெரியகுளம் 14.11 அடியாகவும், இராசேந்திரங்குளம் 9.6 அடியாகவும் உயர்வடைந்துள்ளன. தொடர்ச்சியாக மழைபெய்யும் பட்சத்தில் சில நாள்களில் இவை வான் பாயக்கூடிய நிலை உள்ளது.

மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள வவுனியா வடக்கு மருதமடுக் குளம் 11.2 அடியாகவும், செட்டிகுளம் முகத்தான்குளம் 11.2 அடியாகவும் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதால் அவை தற்போது வான் பாய்ந்து வருகின்றன.

கடந்த வரும் வறட்சி காரணமாகக் குளங்கள் நீர்மட்டம் குறைவாகவே காணப்பட்டன. ஆனால் தற்போது சில நாள்களாகப் பெய்த மழையினால் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது. இருப்பினும் மக்களுக்கோ, பயிர்ச்செய்கைக்கோ எந்தவிதப் பாதிப்புக்களும் ஏற்படவில்லை – என்றார். (ஐ-100)

## அந்தூரியத் தாவரங்களுடன் இலங்கையர் ஒருவர் கைது



கொழும்பு, நவ. 10

நாட்டுக்கு சட்டவிரோதமான முறையில் தாய்லாந்திலிருந்து கொண்டு வரப்பட்ட அந்தூரியத் தாவரங்களுடன் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என் கட்டுநாயக்க சுங்கப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரே இவ்வாறு அந்தூரியத் தாவரங்களுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

பாங்ஹொக் நகரில் இருந்து வருகை தந்த வர்த்தகர் அரசிடம் அனுமதி கோராமல் சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான அந்தூரியத் தாவரங்களைத் தமது பயணப் பொதியினுள் மறைத்து வைத்துக் கொண்டு வந்துள்ளார்.

அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட அந்தூரியத் தாவரங்கள் அரச உடமையாக்கப்பட்டதுடன் சந்தேக நபரான வர்த்தகருக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது என சுங்க பிரதி ஊடகப் பேச்சாளர் பிபில மினுவான்பிட்டிய தெரிவித்தார்.(ஐ)

## ஜப்பான் நிதியுதவியுடனான வேலைத்திட்டங்கள் தொடரும்

### சரத் அமுனுகம கூறுகிறார்

கொழும்பு, நவ. 10

ஜப்பான் நிதியுதவியின் கீழ் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள், திட்டமிட்ட வகையில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென வெளிவிவகார அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

ஜப்பான் தூதுவர் இதற்கான உறுதிமொழிகளை தனக்கு வழங்கினார் என அமைச்சர் தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஜப்பான் நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்படவிருந்த இலகு ரயில் வேலைத்திட்டத்துக்கான, ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.(ஐ)

## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2018

"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்."

*- மூப்பர் அம்பிலோகியோஸ்(கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)*

## நாளை

11.11.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: மூலம் பி.இ. 1.27 வரை
திதி : சதுர்த்தி பி.இ. 12.44 வரை
சுபநேரம் : 9.06 – 10.36 வரை
இராகுகாலம் : 4.36 – 6.06 வரை

# கைபேசிக்கு எஸ்.எம்.எஸ் அனுப்பிப் பண மோசடி!

## யாழ்ப்பாணத்தில் முதல் வழக்கு நீதிமன்றுக்கு

யாழ்ப்பாணம், நவ. 10

**பெறுமதியான பரிசில் உங்கள் கிடைத்துள்ளது எனவும், அதனை உரிய முகவரியில் சேர்ப்பிப்பதற்கு வங்கியில் உடனடியாகப் பணம் வைப்பிலிடுமாறும் கோரித் தொலைபேசியில் வந்த அழைப்பில் நம்பிக்கை வைத்து வங்கியில் 93 ஆயிரத்து 800 ரூபா பணத்தை வைப்பிலிட்டு ஏமாந்த மடைந்தார் குடும்பத் தலைவர். அவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கைத் துரிதமாக விசாரணை செய்து பின்னணியிலிருப்போரைக் கைது செய்யுமாறு யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த குடும்பத்தலைவர் ஒருவருக்கு அவரது கைபேசியில் குறுந்தகவல் கடந்த மாதம் ஒன்று வந்துள்ளது. உங்களுக்குப் பெறுமதியான பரிசில் ஒன்று விழுந்துள்ளது என்று அந்தத் தகவல் அமைந்துள்ளது.

அதனை நம்பிய அவர், பதில் தகவல் வழங்கியுள்ளார். அதனையடுத்து அவருக்கு அழைப்பை ஏற்படுத்திய நபர் ஒருவர், தங்களுடைய பரிசிலை உரியவாறு சமர்ப்பிப்பதற்கு 93 ஆயிரத்து 800 ரூபா பணத்தை என்.டி.பி. வங்கியில் வைப்புச் செய்யு மாறு கணக்கு இலக்கத்தை வழங்கியுள்ளார்.

அந்தக் கணக்குக்குக் குடும்பத் தலைவர் உரிய தொகைப் பணத்தை வைப்புச் செய்துள்ளார்.

எனினும் பணம் வைப்பிலிட்டு ஒரு மாத காலமாகியும் அந்தப் பரிசில் தொடர்பில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அதனால் இந்தக் கணக்கு இலக்கத்தை வைத்துக் குடும்பத் தலைவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கினார்.

அந்த முறைப்பாடு தொடர்பில் ஆரம்ப விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை பி அறிக்கையைத் தாக்கல் செய்தனர்.

அதனை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், வங்கியின் கணக்கு அறிக்கையைப் பெற்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து மோசடியின் பின்னணியில் உள்ளோரைக் கைது செய்யுமாறு உத்தரவிட்டார். (ஐ)

# நவீல்ட் பாடசாலையில் சிமாட் வகுப்பறை திறப்பு



யாழ்ப்பாணம், நவ. 10

கைதடியில் உள்ள நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்காக ஜோன் கீல்ஸ் ஒவிஸ் ஓட்டோமேசன் நிறுவனத்தால் அமைத்துக் கொடுக்கப்பட சிமாட் வகுப்பறைத் திறப்புவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது.

அந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய மாணவர்கள் தமது தொழில்நுட்பக் கல்வியை வளர்த்து கொள்ளும் வகையில் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த வகுப்பறையை ஜோன் கீல்ஸ் ஒவிஸ் ஓட்டோமேசன் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெனத தொரதெனிய சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் ஜோன் கீல்ஸ் ஒவிஸ் ஓட்டோமேசன் நிறுவனத்தின் முகாமையாளர்களான அசோக் சந்திரசேகரம், அசோக் பாலசுந்தரம், நெவில் சமரநாயக்க, சுஜீவ ராஜபக்ஷ, லந்திறா, பிரசன்ன வீரக்கோன், சஞ்சீவ டி சேரம், பி.சயந்தன் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# 200 ஆண்டுகள் சிறைக்கு எதிரான மேன்முறையீடு

## விசாரிக்காமலேயே நிராகரித்தது நீதிமன்றம்

கொழும்பு, நவ. 10

இலங்கை மத்திய வங்கி குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்பு டைய குற்றத்துக்கு, 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட மூன்று பேர், தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனுவை, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே, மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது.

72க்கும் அதிகமானோரைக் கொலை செய்தனர் என்று, குற் றஞ்சாட்டப்பட்டுத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், விக்னேஸ்வரநாதன் பத்திரன், சிவகுமார் மற்றும் செல்வகுமார் நிர்மதன் ஆகிய மூவரையும், 2002ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றம் குற்றவாளிகளாகக் கண்டு, 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கியிருந்தது.

தமக்கு வழங்கப்பட்டுள்ள 200 ஆண்டுகள் சிறைத்தண்டனையை இரத்துச் செய்யுமாறு கோரி, இவர்கள் மூவரும், மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்திருந்தனர். அந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான தீபாலி விஜயசுந்தர மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய நீதியரசர் குழு முன்பாக நேற்று முன் தினம் அழைக்கப்பட்டது.

அந்த மனுவை பரிசீலனைக்கு எடுக்காமலேயே, அதனை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது. (ஐ)

# கிளிநொச்சி, முல்லையில் அதிகளவு மழை வீழ்ச்சி



கிளிநொச்சி, நவ. 10

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த பிரதேசங்களில் 140 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல குடும்பங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இதேவேளை, மழையுடனான வானிலை காரணமாக சில ஆறுகளின் நீர்மட்டம் உயர்வடைந்து வருவதாக இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் மண் சரிவு அபாயம் ஏற்படும் என அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் வசிக்கும் மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இந்தியா கைவிட்டதால் சீனாவுக்கு கொடுத்தோம்

## கூறுகின்றார் நாமல் எம்.பி.

இந்தியாவுக்குக் கொடுத்த திட்டங்கள் ஒன்றும் முறையாக நிறைவேற்றப்படாதமையினால் அவற்றைச் சீனாவிடம் கையளித்தோமென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியா டுடே செய்திப் பிரிவுக்கு வழங்கிய நேர்காணலொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தள விமான நிலையத் திட்டங்கள் உள்ளிட்ட பலவற்றை ஆரம்பத்தில் இந்தியாவுக்கே கையளித்தோம்.


ஆனால் அத்திட்டங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ளவில்லை.

மேலும் இலங்கைக்குப் பல்வேறு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு சீனா உதவியுள்ளது. அதனடிப்படையிலேயே சீனாவிடம் திட்டங்களை கையளித்தோம்.

அரசியல்வாதிகள் என்ற ரீதியில் மக்களின் நலனே எம்மை பொறுத்தவரை முக்கியம். அந்த வகையில் சீனா இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு முன்வந்தமையால் அவற்றிடம் கையளித்தோம்.

ஆனால்சீனா, இந்தியாவுடனான இலங்கையின் உறவுகள் தொடர்பில் மக்கள் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளனர். இருப்பினும் புதிய அரசு இந்தியாவுடன் தொடர்ச்சியாக நல்லுறவை ஏற்படுத்தும் விடயங்களில் கவனம் செலுத்தும்–என்றார். (ஐ)

# இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 30 அடியானது



கிளிநொச்சி, நவ. 10

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 30 அடியாக உயர்வடைந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது வெள்ளம் வடிந்தோடியுள்ள நிலையில் இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 30 அடியாக உயர்வடைந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் அரச அதிபர் தெரிவிக்கையில் –

சீரற்ற வானிலையால் மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். அதிக மழைவீழ்ச்சி காரணமாகக் கடந்த வாரம் மிகக் குறைவாகவிருந்த இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்து 30 அடியாக உயர்வடைந்துள்ளது.

குளங்கள் சில வான் பாய்ந்தமையால் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்குச் சமைத்த உணவு உள்ளிட்டவை வழங்கப்பட்டு வருகின்றது–என்றார். (ஐ)

# கிளிநொச்சியில் டக்ளஸ்



கிளிநொச்சி, நவ. 10

கிளிநொச்சிக்கு நேற்றுப் விஜயம் மேற்கொண்ட மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துசமய விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

கிளிநொச்சிஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள், கிளிநொச்சி நகர பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசையை ஏற்பாடு செய்ததோடு, ஏ-9 வீதியில் பட்டாசுகளைக் கொளுத்தி அமைச்சரை வரவேற்றனர். (ஐ-70)

# இன்னொரு பாகிஸ்தானாக மாற விரும்புகிறதா இந்தியா?

## இஸ்லாமிய ஊர்களின் பெயர்கள் மாற்றம்

புதுடில்லி, நவ. 10

இந்தியாவில் இஸ்லாமிய பெயர் தாங்கிய நகரங்களின் பெயர்களை மாற்றும் வேலை நடந்து வருகிறது. தீவிர வலதுசாரி இந்து கருத்தியலாளர்கள் இஸ்லாமிய பெயருள்ள நகரங்களை மாற்ற வேண்டும் என்று குரல் கொடுத்து வருகிறார்கள். சில மாநிலங்களின் அரசுகளும் அவர்களுக்குச் சாய்த்துப்யர்களை மாற்றி வருகிறார்கள்.

இந்தவியத்தில்நம்அண்டைநாடானபாகிஸ்தான் எப்படி இருக்கிறது?. தியா போல்தான் இருக்கிறது.

ஆம், நகரங்கள், ஊர்களின் பெயரை மாற்றும் வியத்தில் பாகிஸ்தானும் விதிவிலக்கு அல்ல.


இந்தியாவிலிருந்து பிரிந்து உருவாக்கப்பட்ட இந்த நாடு, தம் இந்திய பாரம்பர்ய பெயர்களை உதிர்த்து, அரபிய பெயரை தழுவிக் கொள்வதில் தான் பெரும் விருப்பம் கொள்கிறது.

### மாற்றப்படும் பெயர்கள்

பெயர் மாற்றப்படும் வியத்தில் ஏராளமான உதாரணங்கள் உள்ளன. தலைநகர் லாகூரி லிருந்து 50 கி.மீ தொலைவில் உள்ள ஓர் ஊர் பாய் பெரு என அழைக்கப்பட்டது. இதுவொரு சீக்கிய பெயர். அதாவது, இந்த நகரத்தை பார்வை யிட்ட ஏழாவது சீக்கிய குரு, அங்கிருந்த சீக்கிய பக்தர் பாய் பெருவின் பக்தியால் கவரப்பட்டு இந்த நகரத்திற்கு பாய் பெரு என பெயரிட்டார். ஆனால், இவை அனைத்தும் கடந்த காலம் ஆகிவிட்டது. இது 'போல் நகர்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இவை மட்டுமல்ல, ஏராளமான ஊதாரணங் கள் உள்ளன். பல இந்து மற்றும் சீக்கிய பெயர் தாங்கிய ஊர்களின் பெயர் இஸ்லாமிய பெயர் களாக மாற்றப்பட்டுள்ளன.

கிருஷ்ணன்நகர் இஸ்லாம்புரா என்றும், ஜெயின் மந்திர் சௌக் பாபர் மஸ்ஜித் சௌக் என்றும் மாற றப்பட்டுள்ளது. இந்தியாவில் பாபர் மஸ்ஜித் இடிக்கப்பட்டப்பின் பாகிஸ்தானில் போராட்டகாரர்கள் ஜெயின் கோயிலை நாசப்படுத்தினர். அதன்பின்



அதிகாரப்பூர்வமாக அந்த பகுதி பாபர் மஸ்ஜித் சௌக் என்று பெயர் மாற்றப்பட்டது.

பலூச்சிஸ்தானில் உள்ள இந்து பாக் எனும் பகுதி முஸ்லிம் பாக் என பெயர் மாற்றப்பட்டது.

ஆனால், உள்ளூர் பேச்சு வழக்கில் இந்தப் பகுதிகள் பழைய பெயர்களின் மூலமாகதான் அடையாளப்படுத்தப்படுகிறது. பழைய பெயர்களை சொல்லிதான் அழைக்கிறார்கள்.

சில ஊர்களின் பெயர் மாற்றப்பட்டு இருந்தா லும், பல ஊர்களுக்கு இன்னும் இந்து மற்றும் சீக்கிய பெயர்கள்தான் இருக்கின்றன.

### இந்து மற்றும் சீக்கிய பெயர்கள்

லாகூர் சுற்று வட்டாரத்திலேயே, தயால் சிங் காலேஜ், குலாப் தேவி மற்றும் கங்கா ராம் மருத்து வமனை, குயிலா குஜ்ஜார் சிங் பகுதி. லக்ஷ்மி சௌக், சாண்ட் நகர், கோட் ராதா கிஷன் என இந்து, சீக்கிய பெயர் தாங்கிய பகுதிகள் நிறைய உள்ளன.

கராச்சியில், குரு மந்திர் சௌராங்கி, அட்மரம் பிரிதம்தாஸ் சாலை, ராம்சந்திரா கோயில் சாலை, குமார் தெரு என்றும் பலுச்சியில் ஹிங்க்லஜ் என்றும் கைபர் மாகாணத்தில் ஹரிபூர் என்றும் இந்து பெயர் கொண்ட பகுதிகள் உள்ளன.

இந்தியா தமது மதச்சார்பின்மை பாதையி லிருந்து விலகி மற்றொரு பாகிஸ்தானாக மாறி வருகிறது எனக் கூறப்படுகின்றது. (ஐ)

# மகாராஷ்டிராவில் சரக்கு ரயிலில் தீ!

## 10 ரயில்கள் இடைநிறுத்தம்



புதுடில்லி, நவ. 10

மகாராஷ்டிர மாநிலத்தில் சரக்கு ரயிலில் தீ விபத்து ஏற்பட்ட தில் 2 பெட்டிகள் எரிந்து சேதமடைந்துள்ளன.

மகாராஷ்டிர மாநிலம் பால்கர் மாவட்டம் தகானு அருகே நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு சரக்கு ரயிலொன்று வந்துகொண்டிருந்தது. தகானு வீதி, வங்கான் ரயில் நிலையங்களுக்கு மத்தியில் வந்தபோது, ரயிலில் திடீரெனத் தீப்பற்றியது. இதில் 2 பெட்டிகள் அதிகம் தீப்பற்றியதால் அந்த பாதையில் இரு புறங்களிலும் பயணிக்கக்கூடிய ரயில்கள் இடைநிறுத்தப்பட்டன.

இந்தத் தகவல் அறிந்து தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று நள்ளிரவு 2 ம ணியளவில் தீயை கட்டுப்படுத்தினர்.

இந்தநிலையில் உயர்அழுத்த மின் கம்பிகள் தீயில் கருகியதால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதுடன், அந்த பாதையில் பயணிக்கக்கூடிய 10 நீண்டதூர ரயில்கள் இடைநிறுத்தப்பட்டன.

தீ முழுவதும் கட்டுப்படுத்தப்பட்ட பின் ரயில்வே தொழிலாளர் கள் சீரமைப்புப் பணியில் ஈடுபட்டனர். தீப்பற்றிய ரயில் பெட்டிகளை அகற்றிவிட்டு, தண்டவாளம் சீரமைக்கப்பட்டு வருகின்றது. மின்கம்பிகள்மாற்றும் பணிகள் நடைபெறுகின் றது. தீ விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசா ரணை நடத்தி வருகின்றனர். (ஐ)

# தலிபான்களுடன் இந்தியா முதற் தடவையாகப் பேச்சு

புதுடில்லி, நவ. 10

ஆப்கானிஸ்தான் தலிபான்களுடன் முதற் தடவை யாக இந்தியா அதிகாரபூர்வமற்ற முறை யில் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்து



வது குறித்து ரஷ்யாவின் ஏற்பாட்டில் மொஸ்கோவில் பேச்சு நடைபெறவுள்ளது. இதில் இந்தியா அதிகாரப் பூர்வமற்ற முறையில் கலந்துகொள்ளவுள்ளது.

ரஷ்யாவில் கடந்த செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி இந்த பேச்சுக்கு முதலில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தநிலையில், ஆப்கானிஸ்தான் திடீரென விலகியதால் அந்தப் பேச்சு நடைபெறவில்லை

இந்தநிலையில் மொஸ்கோவில் மீண்டும் பேச் சுக்கு ரஷ்யா தற்போது 2ஆவது முறையாக ஏற்பாடு செய்துள்ளது. இதில் தலிபான் அமைப்பின் பிரதி நிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் ஆப்கானிஸ்தான், இந்தியா, ஈரான், சீனா, பாகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், அமெரிக்கா மற்றும் சில நாடுகளுக்கும் ரஷ்யா அழைப்பு விடுத்துள்ளது. இந்த பேச்சு குறித்து டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரவீஷ் குமார்,

பேச்சில் இந்தியா அதிகாரப்பூர்வமற்ற முறை யில் கலந்துகொள்ளும். ஆப்கானிஸ்தானில் அமைதி, சீரமைப்பு மேற்கொள்ள எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளையும் இந்தியா ஆதரிக் கின்றது என தெரிவித்துள்ளார்.

அண்மையில் டில்லிக்கு விஜயம் செய்திருந்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் மற்றும் இந் திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரிடையே இடம்பெற்ற பேச்சில், ஆப்கானிஸ்தானில் ரஷ்யா மேற்கொள்ளும் அமைதி முயற்சிக்கு இந்தியா ஒத்துழைக்கும் என உறுதியளிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

# அதிக பெண் விமானிகளை கொண்ட நாடு இந்தியாவே



மும்பாய், நவ. 10

உலகிலேயே அதிக பெண் விமானிகளைக் கொண்ட நாடு என்ற பெருமையை இந்தியா பெற் றுள்ளது.

அதிலும், அதிக பெண் விமானிகள் என்ற அள வோடு இல்லாமல், உலகில் அதிக பெண் விமானி களின் சராசரி அளவை விட இந்தியாவில் இரண்டு மடங்கு அதிகமான பெண் விமானிகள் இருக்கிறார் கள் என்பதுதான் இங்கே குறிப்பிடப்பட வேண்டிய விடயம்.

உலகில் உள்ள மொத்த விமானிகளில் பெண் களின் சதவீதம் 5.4 வீதம். ஆனால் இதுவே இந்தி யாவில் ஒட்டுமொத்த விமானிகளில் பெண் விமா னிகளின் வீதம் 12.4 வீதமாக உள்ளது. அதாவது இந்தியாவில் உள்ள 8,797 விமானிகளில் 1,092 பேர் பெண் விமானிகள். இவர்களில் 385 பேர் கப்டன்களாக உள்ளனர்.

உலக அளவில் என்று எடுத்துக் கொண்டால் சுமார் 1.5 லட்சம் விமானிகள் உள்ளனர். இவர் களில் 8,061 பேர் பெண்கள், இவர்களில் 2,190 பேர் கப்டன்களாக உள்ளனர். (ஐ)

# மலேசியாவுக்குக் கடத்த முயன்ற 300 நட்சத்திர ஆமைகள் பறிமுதல்

## ஐந்து பேர் பொலிஸாரால் கைது



சென்னை, நவ. 10

சென்னை காசிமேட்டில் விமானம் மூலம் மலேசியாவுக்குக் கடத்த முயன்ற 300 நட்சத்திர ஆமைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நட்சத்திர ஆமை கள் கடத்தப்படுவதாக ராயபுரம் உதவி பொலிஸ் ஆணையாளர் கண்ணனுக்கு தகவல் கிடைத்தது. இந்தநிலையில் காசிமேடு மீன்பிடி துறைமுக பொலிஸ் அதிகாரிகள் கடந்த புதன் கிழமை இரவு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞர்களிடம் காணப்பட்ட அட்டைப் பெட்டிகளைச்சோதனை செய்தபோது அதில் 300 நட்சத்திர ஆமைகள் மறைத்து வைக்கப்பட்டு, மலேசிய முகவரி ஒட்டப்பட்டும் இருந்தது.

கடல் வழியாக நட்சத்திர ஆமைகளைக் கடத்திவந்த மர்ம கும்பல் அதனைச் சென்னையில் இருந்து விமானம் மூலம் மலேசியாவுக்கு கடத்தவிருந்ததாக விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது.

நட்சத்திர ஆமைகளைப் பொலிஸார் பறிமுதல் செய்ததோடு, சந்தேகநபர்களையும் கைதுசெய்தனர்.

கைப்பற்றப்பட்ட ஆமைகளின் மதிப்பு சுமார் 71.43 லட்சம் இந்திய ரூபாய் என தெரியவந்துள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட நட்சத்திர ஆமைகளைச் சுங்கத்துறை அதிகாரிகளிடம் பொலி ஸார் ஒப்படைத்துள்ளனர். தப்பியோடிய கும்பல் குறித்து பொலி ஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# சட்டவிரோதக் குடியேறிகளுக்கு இனி அமெரிக்காவில் புகலிடம் கிடையாது

## ட்ரம்ப் நிர்வாகம் அதிரடி அறிவிப்பு



வாஷிங்டன், நவ. 12

குடியேறிகள் தொடர்பான ஒரு புதிய விதியின் படி, நாட்டின் தெற்கு எல்லை வழியாகச் சட்டவிரோதமாக நுழையும் குடியேறிகளுக்கு இனி அமெரிக்காவில் தஞ்சம் கோர உரிமை இல்லை என்று ட்ரம்ப் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் நீதி மற்றும் உள்நாட்டு பாதுகாப்புத் துறைகள் வெளியிட்ட புதிய உத்தரவின் படி குடியேறிகள் தொடர்பான அதிபரின் தடையை மீறும் நபர்களுக்குப் புகலிடம் மறுக்க இயலும்.

தேசிய நலனைக் கருத்தில் கொண்டு அதிபர் குடியேற்றத்தை தடுத்து நிறுத்தலாம் என அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

அதிபர் டொனால்ட் ட்ரம்பின் 2018 அமெரிக்க இடைக்கால தேர்தல் பிரசாரத்தில் குடியேற்றம் முக்கிய கவனம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

மத்திய அமெரிக்காவில் உள்ள நாடுகளில் இருந்து தங்களின் வடக்கு எல்லையான மெக்ஸிக்கோ வழியாக கரவன் வாகனங்களில் அமெரிக்காவுக்குள் நுழைபவர்கள் மீது தாக்குதல் தொடுத்துள்ள டிரம்ப், அவர்களைத் தடுத்து நிறுத்த அமெரிக்கத் துருப்புக்களை நாட்டின் எல்லைக்குச் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அடிக்கடி ஆயிரக்கணக்கில் குடியேறிகள் நாட்டிற்குள் நுழைவதைப்படையெடுப்பு என்று டிரம்ப் வர்ணித்துள்ளார்.

கடந்த புதன்கிழமையன்று பதவி விலகிய சட்டமாஅதிபர் (அரசு முதன்மை வழக்கறிஞர்) ஜெப்செஸ்ஸுக்குப்பதிலாகநியமிக்கப்பட்ட தற்காலிக சட்டமா அதிபரான மத்யூ விடேகர்மற்றும்உள்நாட்டுபாதுகாப்பு தலைவர் கிறிஸ்டீன் நீல்சன் ஆகிய இருவரும் வியாழக்கிழமையன்று இடைக்கால இறுதி விதி என்ற புதிய விதியை அறிவித்துள்ளனர்.

நாட்டிற்குள் சட்டவிரோதமாக அல்லது ஆவணங்கள் இன்றி நுழையும் அனைத்து வெளிநாட்டினரின் வருகையை இடைநிறுத்துவது மற்றும் நாட்டின் குடியேற்றம் மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி அமெரிக்காவின் நலன்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என்று கணிக்கப்பட்டவர்கள் மீது தேவையான நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் நுழைவைத் தடுக்கும் நடவடிக்கைளை எடுக்க அதிபருக்கு அதிகாரமுள்ளதாக இவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, அமெரிக்கா மற்றும் மெக்ஸிக்கோ எல்லை வழியாக சட்டவிரோதமாக நுழைபவர்கள் மீது அதிபர் இடைநிறுத்தம் அல்லது தடுத்து நிறுத்தும் ஆணையை வெளியிட்டால் அவர்கள் அமெரிக்காவில் புகலிடம் கோரி விண்ணப்பிக்க முடியாது.

முன்னதாக, கடந்த ஜுன் மாதத்தில் குடியேறிகள் தொடர்பான பிரச்சனையில் அதிகரித்து வரும் கண்டனங்களை மீறி அமெரிக்காவுக்குச் சட்டவிரோதமாக நுழையும் குடும்பங்கள் மற்றும் குழந்தைகளை தனித்தனியாக பிரித்து ட்ரம்ப் புதிய கொள்கையை அறிமுகம் செய்தார்.

சட்டவிரோதமாக அமெரிக்காவில் நுழையும் குடும்பங்களில் பெற்றோர் கைது செய்யப்பட்டால் குழந்தைகள் அவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டுத் தனியான இடத்தில் வைக்கப்படுவார்கள் என்று டிரம்ப் அப்போது தெரிவித்தார்.

ஆவணங்கள் இல்லாமல் அமெரிக்காவுக்கு வரும் குடியேறிகள், அமெரிக்காவுக்கு அழுகல் போல பாதிப்பு உண்டாக்குவர் என முன்னர் ட்ரம்ப் தெரிவித்த கருத்து பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியது. (ஐ)

# ஜனாதிபதி ட்ரம்புடன் வாக்குவாதம்; சி.என்.என். செய்தியாளருக்குத் தடை



வாஷிங்டன், நவ. 10

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்போடு நடைபெற்ற கடும் வாக்குவாதத்திற்கு பின்னர் சில மணிநேரங்களில் வெள்ளை மாளிகையின் சி.என்.என். செய்தி ஊடகத் தலைமை செய்தியாளர் ஜிம் அகோஸ்டாவின் சான்று ஆவணங்களை வெள்ளை மாளிகை தற்காலிகமாக ரத்துச் செய்துள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஜிம் அகோஸ்டா கேள்வி எழுப்பியபோது, அவருடைய கைகளில் இருந்த ஒலிவாங்கியை வெள்ளை மாளிகை ஊழியர் ஒருவர் பறிக்க முயன்றார்.

ஓர் இளம் பெண் மீது அவர் கை போட்டதால் இந்தச் செய்தியாளரின் நுழைவு அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகையின் ஊடகச்செயலாளர் சாரா சாண்டர்ஸ் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற கீழவையில் குடியரசு கட்சியினர் பெரும்பான்மையை இழந்தாலும், மேலவையில் அதிக தொகுதிகளில் வென்றிருக்கும் அமெரிக்க இடைத்தேர்தல் பற்றி அதிபர் டிரம்ப்செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது,

### செய்தியாளர் சந்திப்பில் நடைந்தது என்ன?

மத்திய அமெரிக்காவில் இருந்து அமெரிக்கா நோக்கி வரும் தஞ்சம் கோருவோரை விவரிக்க படையெடுப்பு என்ற சொல்லை டிரம்ப் பயன்படுத்தியது பற்றி அகோஸ்டா கேள்வி எழுப்பினார்.

பரவலாக இனவெறியாகப் பார்க்கப்படும் குடியேற்ற விளம்பரம் பற்றியும் அவர் கேள்வி கேட்டார்.

2016ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில்போது ரஷ்யாவின் தலையீடு தொடர்பான புலனாய்வு பற்றி அகோஸ்டா கேள்வி கேட்டபோது, இது போதும். ஒலிவாங்கியைக் கீழே வையுங்கள் என்று டிரம்ப் அவரிடம் கூறினார்.

பெண் ஊழியர் ஒருவர் பத்திரிகையாளரிடம் இருந்து ஒலிவாங்கியை பிடுங்க முயன்றார். அகோஸ்டா அவ்வாறு செய்வதை எதிர்த்தார்.

உங்களை வேலை செய்ய நியமித்ததற்கு சி.என்.என். வெட்கப்பட வேண்டும். நீங்கள் முரட்டுத்தனமானவர், பயங்கரமானவர் என்று கூறிய அதிபர் டிரம்ப், தன்னுடைய செய்திச் செயலரிடம் அகோஸ்டா மோசமாக நடந்து கொண்டார் எனக் கூறினார்.

அகோஸ்டாவின் செயலை நியாயப்படுத்திபேசிய இன்னொரு செய்தியாளரிடம், நான் உங்களுடைய பெரிய ரசிகனும் அல்ல என்று ட்ரம்ப் கூறியபோது அங்கு சிரிப்பலை எழுந்தது.

### வெள்ளை மாளிகை சொல்வதென்ன?

தனதுபணியைச்செய்யமுயல்கின்ற இளம்பெண்ணொருவரின் மீது செய்தியாளர் கைகள் வைத்திருந்ததை வெள்ளை மாளிகை ஒருபோதும் பொறுத்துக் கொள்ளாது என்று சாண்டர்ஸ் டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயல் அருவருப்பானது மட்டுமல்ல, இந்த நிர்வாகத்தில் பணிபுரியும் இளம் பெண்கள் உட்பட அனைவரையும் அவமதிப்பதற்கு இதுவோர் எடுத்துக்காட்டு என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன் விளைவாக அடுத்த அறிவிப்பு வரும்வரை, இந்த செய்தியாளருக்கு வழங்கப்பட்டுள்ள நுழைவு அனுமதியை ரத்து செய்திருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

வெள்ளை மாளிகை வளாகத்தில் நுழைவதில் இருந்து பாதுகாப்புத் துறையால் தடுக்கப்பட்டதாக அகோஸ்டா டுவிட்டர் பதிவிட்டுள்ளார்.

### அகோஸ்டா மற்றும் சி.என்.என். சொல்வதென்ன?

தான் கேள்விகள் கேட்பதை அதிபர் டிரம்ப் விரும்பாததால், தங்களுக்கிடையில் விவாதம் ஏற்பட்டது என்று அகோஸ்டா சி.என்.என்-ல் தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக ஜிம் அகோஸ்டா செய்தியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பெண் மீது கைகளை வைக்கவில்லைஎன்றுகூறிய அகோஸ்டா, அதிபரிடம் தொடர்ந்து கேள்விகள் கேட்பதற்கு ஒலிவாங்கியை கையில் வைத்திருக்க முயன்றேன் என்று கூறியுள்ளார்.

அமெரிக்க வெள்ளை மாளிகையின் இந்தத் தடை நடவடிக்கை ஜிம் அகோஸ்டாவின் சவால் மிக்க கேள்விகளுக்குப் பதிலடியாக வழங்கப்பட்டுள்ளது என்று டுவிட்டரில் சி.என்.என். பதிவிட்டுள்ளது.

சாரா சாண்டர்ஸ் தவறுதலான குற்றச்சாட்டுக்களை தெரிவித்திருக்கிறார் எனவும், நடைபெறாத சம்பவத்தை குறிப்பிட்டிருப்பதாகவும் சி.என்.என் விளக்கமளித்துள்ளது.

வெள்ளை மாளிகையின் இந்த முடிவு முறையற்றது, ஏற்றுகொள்ள முடியாதது என்று அதிபர் மாளிகை செய்தியாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வெள்ளை மாளிகை செய்தியாளர் கூட்டமைப்பு கூறியுள்ளது.

பலவீனமான, தவறான இந்தத் தடை நடவடிக்கையை வெள்ளை மாளிகை உடனடியாக திரும்பபெற வேண்டுமென அது வலியுறுத்தியுள்ளது. (ஐ)

# தென்னாபிரிக்காவில் 400 எருமைகள் சாவு!

## சிங்கங்கள் துரத்தியதால் நீரில் மூழ்கி

கேப்டவுன், நவ. 10

தென்னாபிரிக்காவின்போட்ஸவானா மற்றும் நமிபியா நாடுகளுக்கு இடையில் உள்ள நதி ஒன்றில் நூற்றுக்கணக்கான எருமைகள் நீரில் மூழ்கின.

இது தொடர்பான முதல்கட்ட விசாரணையில், சிங்கங்களால் துரத்தப்பட்டபோது ஓடியதில் இவை ஆற்றில் மூழ்கியுள்ளன என போட்ஸ்வானா அதிகாரிகள் கூறுகிறார்கள்.

ஆற்றின் மறுபக்கத்தில் தண்ணீர் அதிகமாக இருந்ததினால் எருமைகள் பதறிப்போய் நெரிசலில் சிக்கிக் கொண்டிருக்கலாம் என அப்பகுதியில் தங்கும் விடுதி வைத்திருக்கும் உரிமையாளர் பிபிசியிடம் தெரிவித்தார்.

இதற்கு முன் நூற்றுக்கணக்கான எருமைகள் நீரில் மூழ்கியதாகக் கேள்விப்பட்டதில்லை என்றும் அவர் கூறினார்.

சுமார் 400 எருமைகள் இறந்தன என அதிகாரிகள் தெரிவித்தனர். அப்பகுதியில் வாழும் மக்கள் இறந்த எருமைகளை வீட்டுக்குச் சமைக்க எடுத்துச்சென்றனர். (ஐ)

# கலிபோர்னியாவில் காட்டுத் தீ



வாஷிங்டன், நவ. 10

சியரா மலைஅடிவாரத்தின் பல்வேறு நகரங்களை நோக்கி காட்டுத்தீ வேகமாக பரவி வருவதால், வட கலிபோர்னியாவில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி வருகிறார்கள்.

பள்ளிகள், குடியிருப்புகள் மற்றும் மருத்துவமனைகளில் இருக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள்.

இதுவரை உயிரிழப்பு ஏதும் இருக்கவில்லை. (ஐ)

# ஒட்டிப்பிறந்த இரட்டையரை பிரிக்க ஆஸ்திரேலியா முயற்சி



ஒட்டிப்பிறந்த இரு புடானிய குழந்தைகளைப் பிரிக்கும் முயற்சியை ஆஸ்திரேலிய மருத்துவர்கள் தொடங்கியுள்ளனர்.

பிறந்து 15 மாதங்கள் ஆகும் நிமா மற்றும்டவாபெல்டன்உடல்ஒட்டிப்பிறந்துள்ளனர். அவர்கள் இருவரும் ஒரு கல்லீரல் மற்றும் குடலைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

ஊட்டச்சத்துக் குறைபாடு காரணங்களால் இதுவரை அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்படாமல் இருந்தது. (ஐ)


இன்று
61 ஆவது
அகவையைக் கொண்டாடும்
தமிழ் மக்களின் தோழன்
டக்ளஸ் தேவானந்தா
(மீள்குடியேற்றம், புனர்வாழ்வு,
வடக்கு அபிவிருத்தி,
இந்து மத அலுவல்கள் அமைச்சர்)
அவர்களுக்கு
எமது இனிய பிறந்த நாள்
வாழ்த்துக்கள்
உங்கள் மக்கள் பணி
மேலும் தொடரட்டும்
எங்கள் ஆதரவு
என்றும் உங்களோடு....!
நெடுந்தீவு மக்களும்,
பிரதேச சபை உறுப்பினர்களும்

# உழைத்து வாழ்வதற்கு வழி செய்து தாருங்கள்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முல்லை மாவட்ட மீனவர் வேண்டுகோள்



முல்லைத்தீவு, நவ. 10

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற் கொண்டுள்ள வடக்கு அபிவிருத்தி , மீள்குடியேற்ற புனர்வாழ்வு மற்றும் இந்து விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் கடற்றொழிலில் தாம் எதிர்கொண்டுவரும் தடைகள் மற்றும் பிரச்சி னைகளுக்கு நிரந்தர தீர்வு பெற்றுத்தந்து தாம் உழைத்து வாழ வழிவகை செய்யுமாறு உருக்க மான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது முல் லைத்தீவு அரச விருந்தினர் விடுதியில் இந்த மக் கள் சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன்போது, மக்கள் பிரதிநிதிகள் தாம் எதிர் கொண்டு வரும் ஏனைய பிரச்சினைகளான பிரச்சி னைகளான காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், வீட மைப்பு வாழ்வாதார உதவிகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எடுத்துக் கூறித் தீர்வுகளைப் பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

மக்களது கோரிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஏக காலத்தில் இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் பெற்றுத்தருவார் என உறுதியளித்தார். (ஐ)

# போலி நாணயத்தாள்களுடன் கந்தளாயில் இளைஞர் கைது

கொழும்பு, நவ. 10

கந்தளாய் மணிக்கூட்டுக் கோபுரத்தின் அருகில் வைத்து 5000 ரூபா போலி நாணயத்தாள்களு டன் இளைஞர் ஒருவர் கந்தளாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தம்பலகாமத்தைச் சேர்ந்த 24 வயதுடைய அலி அக்பர் மொஹமட் ரஸ்தான் என்பவரே இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தளாய் பொலிஸாருக்கு போலி நாயணத்தாள் குறித்து கிடைக்கப்பெற்ற விசேட தொலைப்பேசி அழைப்பின் அடிப்படையில் கந்தளாய் நகரில் மேற் கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போதே இந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள் ளார்.

கந்தளாய் நகரின் மணிக்கூட்டுக் கோபுரத் தின் அருகில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய அந்த இளைஞரைப் பொலிஸார் சோதனையிட்டனர். இதன் போது அவரிடமிருந்த 5000 ரூபா நாண யத் தாள்கள் 10 சோதனைக்குட்படுத்தப்பட்டன. இதன்போது அவை அனைத்தும் போலி நாண யத் தாள்கள் என உறுதிப்படுத்தப்பட்டன. (ஐ)

# ஆபத்தில் தவித்தவர்களை விரைந்து மீட்க உதவினார் அமைச்சர் டக்ளஸ்



முல்லைத்தீவு, நவ. 10

முல்லைத்தீவு மாவட்டத்தின் நித்தகக்குளம் உடைப்பெடுத்ததன் காரணமாக உயிருக்குப் போராடிய நிலையில் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் துரித முயற்சியின் பயனாகப் பத்திரமாக மீட்கப்பட்டனர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் நித்தகக்குளம் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் உடைப்பெடுத்துள்ளது. இதன்போது தோட்ட பாதுகாப்புக்காகச் சென்றிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பெண் உட்பட 6 பேர் அந்தக் குளம் உடைப்பெடுப்பின் காரணமாக வெளியேறமுடியாத நிலையில் சிக்கி மரமொன்றில் ஏறி உயிருக்கு போராடிக்கொண்டிருந்தனர் .

அவர்களை மீட்கக் காலை முதல் மாலை வரை மேற்கொண்ட முயற்சிகள் யாவும் தோல்வி கண்டிருந்தன.

குறிப்பாக தரைப்படை மற்றும் கடற்படையினர் எடுத்த முயற்சிகள் யாவும் தோல்விகண்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் அந்த மாவட்டத்தி ற்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டது

இதையடுத்து அமைச்சர் துறை சார்ந்தோருடன் கலந்துரையாடியதன் அடிப்படையில் 6 பேரும் இலங்கை விமானப்படையின் உதவியுடன் உலங்குவானூர்தி மூலம் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

தம்மை ஆபத்திலிருந்து மீட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை மீட்கப்பட்ட 6 பெரும் நேரில் சென்று தமது நன்றிகளை தெரிவித்தி ருந்தனர். (ஐ)

# ஜனாதிபதி பணிக்குழுவின் பிரதானியாக ஹிட்டிசேகர



கொழும்பு, நவ. 10

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியாக சிரேஷ்ட நிர்வாகத்துறை அதிகாரியான எச்.எம்.பீ.ஹிட்டிசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடமிருந்து அவர் கடந்த புதன்கிழமை தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, சுகாதாரம், போசணை, சுதேச வைத்தியத்துறை அமைச்சின் புதிய செயலாளராக சிரேஷ்ட நிர்வாகத்துறை அதி காரியான வசந்தா பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.(ஐ)

# ரயிலுடன் மோதுண்டு காயமடைந்தது யானை



கொழும்பு,நவ. 10

கல்கமுவ பிரதேசத்துக்கருகில் நேற்று முன் தினம் காலை காட்டு யானையொன்று, ரயிலுடன்மோதுண்டுபலத்தகாயங்களுக்குள்ளானது.

வவுனியாவிலிருந்துகொழும்பு நோக்கிப் பயணித்தரயிலொன்றிலேயே இந்த யானை மோதுண்டுள்ளது.

இந்த விபத்தால் ரயில் வழி பாதையில் எந்தவித தடையும் ஏற்பட வில்லையென்றும், இந்தப் பாதை வழியே, ரயில் சேவை வழமை போல நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நாலக டி சில்வா மறியலில்

கொழும்பு, நவ. 10

முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வா தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கொலை திட்டம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட ஒலிப்பதிவு தொடர்பில் முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வா கைது செய்யப்பட் விளக்க மறியலில் வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருமலையில் வெள்ள அபாயம்

திருமலை, நவ. 09

திருகோணமலை மாவட்டத்தில் மழை காரணமாக பல்வேறு இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மூதூர் ,கிண்ணியா, சேருவில , கந்தளாய் உட்பட பல பகுதிகள் வெள்ள இடரை எதிர் நோக்கியுள்ளன.

இதனால் சேருவில, கிண்ணியா, மூதூர்,வெருகல் பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய 1022 குடும்பங்களைச் சேர்ந்த 3790 பேர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 108 குடும்பங்கள் உறவினர்களின் வீடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளன. 26 வீடுகள் பகுதியளவில் சேதம டைந்துள்ளன.

பாதிப்புக்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை 24 மணி நேரமும் செயற்பட்டு வருவதாகவும் எந் நேரத்திலும் தயார் நிலையில் இருந்து வருவதாகவும் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத் துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கே.சுகுனதாஸ் தெரிவித்தார். (ஐ)

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட்; இங்கிலாந்து அணி வெற்றி



இலங்கை அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 211 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி, மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடுவதற்காக இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. அங்கு சென்றுள்ள இங்கிலாந்து அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், ஒரேயொரு ரி-20 போட்டி கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இந்தச் சுற்றுப்பயணத்தில் முதலாவதாக ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், நடைபெற்றது. இதில் தொடரை இங்கிலாந்து அணி 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. அதன் பிறகு நடைபெற்ற ஒரேயொரு ரி-20 போட்டியிலும் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது.

தற்போது இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், நடைபெற்று வருகிறது. இதன் முதல் டெஸ்ட் போட்டி, காலி மைதானத்தில் நடைபெற்று முடிந்துள்ளது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.



இதன்படி களமிறங்கிய இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்ஸுக்காக 342 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக பென் போக்ஸ் 107 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இதன் மூலம் அறிமுகப் போட்டியிலேயே சதம் அடித்த பெருமையை அவர் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் தில்ருவான் பெரேரா 5 விக்கெட்டுகளையும், சுரங்க லக்மல் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி, 203 ஓட்டங்களை பெற்றது. இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக அஞ்சலோ மத்தியூஸ் 52 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் மொயின் அலி 4 விக்கெட்டுகளையும், ஜெக் லீச் மற்றும் அடில் ராஷித் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 139 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 322 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை தனது துடுப்பாட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது. இதற்கமைய இலங்கை அணிக்கு 462 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது இங்கிலாந்து அணி சார்பில், கீடன் ஜெனிங்ஸ் ஆட்டமிழக்காது 146 ஓட்டங்களையும், பென் ஸ்டோக்ஸ் 62 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். கீடன் ஜெனிங்ஸின் இந்த ஓட்ட எண்ணிக்கையானது, டெஸ்ட் போட்டிகளில் அவரது அதிகபட்ச ஓட்டமாகப் பதிவு செய்யப்பட்டது.

பந்து வீச்சில் தில்ருவான் பெரேரா மற்றும் ரங்கன ஹேரத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

முழுதாக இரண்டு நாட்கள் மீதம் வைத்து, 462 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, போட்டியின் நான்காவது நாளான இன்றே 250 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இங்கிலாந்து அணி 211 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை அணி சார்பில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக அஞ்சலோ மெத்தியூஸ் 53 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் மொயின் அலி 4 விக்கெட்டு களையும், ஜெக் லீச் 3 விக்கெட்டுகளை யும் வீழ்த்தினர்.

இந்த வெற்றியானது இங்கிலாந்து அணிக்குச் சரித்திர வெற்றியாக பார்க்கப்படுகின்றது. இதுவே காலி மைதானத்தில் இங்கிலாந்து அணி பெற்றுக்கொள்ளும் முதல் வெற்றியாகும்.

இந்தப் போட்டியுடன் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ரங்கன ஹேரத், ஓய்வுபெறுகிறார்.

அணிக்கு பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்த சாதனை வீரர் ஹேரத்தை, இலங்கை அணி தோல்வியுடன் வழியனுப்பி வைப்பது இரசிகர்களிடையே கடும் அதிருப்தி யை ஏற்படுத்தியுள்ளது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணி சார்பில், அறிமுக வீரராக களமிறங்கி சதம் விளாசிய பென் போக்ஸ் தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 14ஆம் திகதி பல்லேகல மைதானத்தில் நடைபெறவுள்ளது.(ஐ)

# இந்திய - ஆஸி. அணிகள் அறிவிப்பு



இந்தியக் கிரிக்கெட் அணி, மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இதற்கமைய அங்கு செல்லும் இந்தியா அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர், மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது.

இதில் முதலாவதாக இரு அணிகளுக்கிடையிலான ரி-20 தொடர் நடைபெறவுள்ளது. இதற்கு இரு அணிகளும் தங்களைத் தயார் படுத்தி வருகின்றன.

இதற்கிடையில் இத்தொடருக்கான இரு அணி விபரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்தியா அணியில், அணியின் முன்னணி வீரரான மகேந்திர சிங் டோனி நீக்கப்பட்டுள்ளார். மேலும், ஜடேஜா, அஸ்வின், ஹர்திக் பாண்ட்யா, அம்பத்தி ராயுடு ஆகியோருக்கு அணியில் இடம் அளிக்கப்படவில்லை.

அத்தோடு ஸ்ரயாஸ் ஐயர், குர்னல் பாண்ட்யா. வொஷிங்டன் சுந்தர் ஆகியோருக்கு அணியில் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய அணியில், விராட் கோஹ்லி, ரோஹித் சர்மா, ஷிகர் தவான், கே.எல். ராகுல், ஸ்ரயாஸ் ஐயர், மனிஷ் பன்டே, தினேஷ் கார்திக், ரிப்பந்த், குல்தீப் யாதவ், யுஸ்வேந்திர சஹால், வொஷிங்டன் சுந்தர், குர்னல் பாண்ட்யா, புவனேஸ்வர் குமார், ஜஸ்பரிட் பும்ரா, உமேஷ் யாதவ், காஹீல் அஹமட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேபோல ஆரோன் பின்ஞ் தலைமையிலான ஆஸ்திரேலிய அணியில், வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க், பீற்றர் சிடில், சகலதுறை வீரர் மிட்செல் மார்ஷ், சுழற்பந்து வீச்சாளர் நாதன் லியோன் ஆகியோருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

இதில் இந்திய அணிக்கு எதிரான 4 டெஸ்ட் போட்டிகள், உலகக் கிண்ணத் தொடர், ஆஸ் தொடர் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு இவ்வாறு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மார்கஸ் ஸ்டோனிஸ், ஜேசன் பெஹ்ரேன்டார்ப் ஆகியோர் அணிக்கு திரும்பியுள்ளனர்.

ஆஸ்ரேதிலிய அணியில், ஆரோன் பின்ஞ், அலெக்ஸ் காரே, ஆஷ்டன் அகர், ஜேசன் பெஹ்ரேன்டார்ப், நாதன் குல்டர் நைல், கிறிஸ் லின், கிளென் மக்ஸ்வெல், பென் மெக்டெர்மோட், டிஆர்சி ஷோர்ட், பில்லி ஸ்டேன்லேக், மார்கஸ் ஸ்டோனிஸ், ஆன்ட்ரூ டை, ஆடம் ஸம்பா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது ரி-20 போட்டி, எதிர்வரும் 21ஆம் திகதி கபா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

# ஒரு ஓவரில் 43 ஓட்டங்கள் மோசமான ஒரு சாதனை

நியூஸிலாந்தில் நடைபெற்ற உள்ளூர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியொன்றில் சென்டிரல் அணியின் பந்து வீச்சாளர் வில்லெம் லடிக் ஒரே ஓவரில் 43 ஓட்டங்களை அள்ளிக் கொடுத்து மோசமான சாதனையொன்றைப் புரிந்துள்ளார்.

நியூஸிலாந்தில் நடைபெற்ற உள்ளூர் ஒருநாள் கிரிக்கெட் தொடரான போர்ட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி ஒன்றில் நார்தன் டிஸ்ட்ரிக்ட்ஸ் - சென்டிரல் டிஸ்ட்ரிக்ட்ஸ் அணிகள் மோதின.

நார்தன் அணி சார்பில் ஜோ கார்ட்டர், பிரெட் ஹாம்ப்டன் ஆகியோர் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்தபோது சென்டிரல் அணியின் பந்து வீச்சாளர் வில்லெம் லடிக் தனது இறுதி ஓவருக்கான பந்துப்பரிமாற்றத்தை மேற்கொண்டார்.

அதன்படி அவரின் ஓவரை எதிர்த்தாடிய ஹாம்ப்டன் ஓவரின் முதல் பந்தில் 4 ஓட்டத்தைப் பெற்றார். அடுத்தடுத்து அவர் வீசிய இரண்டு பந்துகளிலும் இரு ஆறு ஓட்டங்களை விளாசித் தள்ளினார். இந்த இரு பந்துகளும் நோ போல் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இரண்டாவது பந்திலும் ஆறு ஓட்டத்தை விளாசியதுடன் மூன்றாவது பந்தில் ஒரு ஓட்டத்தையும் பெற்றார்.

இறுதி மூன்று பந்துகளையும் எதிர்த்தாடிய ஜோ கார்ட்டர் மூன்று ஆறு ஓட்டங்களைப் பெற்றார். (4, 6+nb, 6+nb, 6, 1, 6, 6, 6 = 43 ).

இதனால் வில்லெம் லடிக் தான் வீதிய ஓவரில் 43 ஓட்டங்களை அள்ளிக் கொடுத்து'லிஸ்ட் ஏ' போட்டியில் அதிக ஓட்டங்களைக் கொடுத்த பந்து வீச்சாளர் என்ற மோசமான சாதனையை படைத்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற டாக்கா ப்ரீமியர் லீக்கில் அலாவுதீன் பாபு 39 ஓட்டங்களை விட்டுக்கொடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.

## அமைதியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனநாயகம் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பண்புகள் பின்பற்றப்படவேண்டுமெனவும் உள்நாட்டு விவகாரம் என்பதால் இறுதி முடிவொன்று வரும்வரை – எந்தத் தரப்புடனும் தொடர்பு கொள்ளாமல் அமைதி காத்திருக்கத் தீர்மானித்துள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரவீஷ் குமார் தெரிவித்துள்ளார். (ஐ)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நவம்பர் 5ஆம் திகதியிடப்பட்டு, வெளியிட்டுள்ள வர்த்தமானியிலேயே இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

அத்துடன், சிறிலங்கன் விமான சேவை, மிகின் லங்கா விமான நிறுவனம் ஆகியனவும், போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

மத்திய வங்கி மீண்டும் நிதியமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், அந்த வர்த்தமானி அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக பொலிஸ்திணைக்களம், சட்டம், ஒழுங்கு அமைச்சின் கீழேயே இருந்து வந்தது.

போர் நடந்த காலங்களில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்த பொலிஸ்துறை, அனைத்துலக அழுத்தங்களை அடுத்து மஹிந்த ராஜபக்ஷவின் முன்னைய ஆட்சிக்காலத்தில், சட்டம், ஒழுங்கு அமைச்சு உருவாக்கப்பட்டு, அதன் கீழ் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், தற்போது, ஜனாதிபதி மீண்டும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பொலிஸ்துறையைக் கொண்டு வந்துள்ளார். (ஐ)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு இன்று விசேட உரையாற்றவுள்ளார்.

இதன்போது நாடாளுமன்றத்தைக் கலைத்தமைக்கான காரணத்தை அவர் வெளியிடுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு அரசியல் பரபரப்படைந்துள்ள நிலையில் மைத்திரியின் இன்றைய உரை முக்கியமானதொன்றாக நோக்கப்படுகின்றது. (ஐ)

## ஹக்கீம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முக்கிய பேச்சு இடம்பெற்றுள்ளது. இதனால்கொழும்பு அரசியல் வட்டாரங்கள் பரபரப்படைந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவைப் பெறுவதற்காக மைத்திரி – மஹிந்த கூட்டணி கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுவருகின்றது. இவ்விரு கட்சிகளும் புதிய அரசுக்கு ஆதரவளிக்கும் என்று எஸ்.பி. திஸாநாயக்க நேற்று அறிவித்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் மக்காவில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது.

ரவூப் ஹக்கீம் தலைமையிலான மு.கா. எம்.பிக்களுக்கும், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அ.இ.ம.கா. எம்.பிக்களுக்குமிடையே சந்திப்பு இடம்பெற்றுள்ளதை ரிசாத் பதியுதீன் உறுதிப்படுத்தியுள்ளார். தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் படத்தையும் பிரசுரித்துள்ளார்.

## ஜனநாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ள நிலையில், அது குறித்து தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ள கருத்திலேயே மங்கள சமரவீர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பெரும்பான்மை இல்லாமல் ஜனாதிபதி, சட்டவிரோதமாக நாடாளுமன்றத்தைக் கலைத்து இன்னும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ஜனநாயகம், பண்பாடு மற்றும் சட்ட விதிகளை மதிக்கும் அனைவருமே இதற்கு எதிராக ஒன்றிணையவேண்டும். என்று மங்கள அதில் கூறியுள்ளார். (ஐ)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் கொண்டுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்துள்ள நிலையில், அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டரில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஒரு தேசத்தின் தலைவிதியை மக்கள் தான் தீர்மானிப்பார்கள். நாட்டின் முக்கியமான சூழ்நிலையில் முற்போக்கான எதிர்காலத்துக்கு மக்களின் உண்மையான சக்தி நிலையானதாக வழங்கப்படவேண்டும். இலங்கை மக்கள் சரியான தீர்ப்பை வழங்குவார்கள் என நம்புகிறேன் – என்றார். (ஐ)

## மைத்திரிபால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகப் பிரதமர் பதவியை வழங்கியதை எதிர்க்கும் அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் குற்றவியல் பிரேரணைக்கு ஆதரவளிக்கமாட்டோம் என்று அந்தக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்கால அரசியல் களத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கொள்கை விளக்கக் கூட்டம் ஹற்றன் டி கே டபிள்யூ மண்டபத்தில் இடம்பெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஹற்றன் மல்லியப்பு சந்தியிலிருந்து வாகனப் பேரணி ஆரம்பமாகி ஹற்றன் டி கே டபிள்யூ கலாசார மண்டபத்தில் கூட்டம் இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

அண்மையில் ஜனாதிபதி முற்போக்குக் கூட்டணி உறுப்பினர்கள் ஆறு பேரையும் அழைத்து தமது புதிய அரசுக்கு அதரவு தருமாறு கேட்டுக்கொண்டு நாடாளுமன்றத்தில் தமக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும், அல்லது நடுநிலை வகிக்க வேண்டும், அல்லது ஐக்கியதேசிய முன்னணி மீண்டும் ஆட்சியமைக்கும் பட்சத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் பிரதமர் பதவியை வழங்க ஒத்துழைப்பு வழங்கக் கூடாதென மூன்று வியங்களைக் கோரிக்கையாக முன் வைத்தார்.

எனினும் அந்த மூன்று கோரிக்கையையும் நிராகரித்ததுடன் ஐக்கிய தேசிய முன்னணி பல கட்சிகளுக்குச் சொந்தமானது. கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள சகலரும் ஓடி ஓடி வாக்குச் சேகரித்தோம். இதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே இது தனி ஐக்கிய தேசியக் கட்சியல்ல. நீங்கள் முரண்பாடுகள் தொடர்பில் எம்மோடு ஏன் கலந்துரையாடவில்லை என ஜனாதிபதியிடம் நாம் கேட்டபோது, அவரிமிருந்து பதிலெதுவும் இல்லை.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயற்பாடுகள் தொடர்பில் நாட்டில் பலராலும் பாராட்டப்படுகின்றதுடன், எமது கொள்கையை கண்டு பெரும்பான்மையினத்தவர்களும் எம்மோடு இணைய ஆர்வம் காட்டி வருகின்றனர் – என்றார். (ஐ)

ஜனாதிபதி, சட்டவிரோதமாக

## நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் கலைக்கப்படும் அறிவித்தலை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக நேற்றுப் பகல் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவந்தார் ஜனாதிபதி. அத்துடன் பொலிஸ்துறையையும் அவர் பாதுகாப்பு அமைச்சின் கீழ் மாற்றியிருந்தார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம், நான்கரை வருடங்கள் செல்வதற்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது என்றும், மேற்குறிப்பிட்ட காலப் பகுதி முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றத்தின் அனுமதியுடனேயே அதைச் செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 26ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றத்தையும் நவம்பர் 16ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க 113 எம்.பிக்களின் ஆதரவு தேவை என்ற நிலையில் போதிய எம்.பிக்களின் ஆதரவைப் பெற மஹிந்த – மைத்திரி தரப்பினர் பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டு வந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவை மஹிந்த தரப்புக்கு ஆதரவு அளிக்கப்போவதில்லை என்று பகிரங்கமாகவே அறிவித்திருந்தன.

அரசில் நேரெதிர் துருவங்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியவற்றின் தலைவர்கள் சந்தித்துப் பேசியதுடன் ஜனநாயகத்தைக் காப்பாற்ற ஒத்துழைக்கப் போவதாகவும் அறிவித்தனர்.

அத்துடன் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறு அமெரிக்கா உட்படச் சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தம் வழங்கின. இந்த அழுத்தத்தை அடுத்து 16ஆம் திகதி வரை ஒத்திவைத்த நாடாளுமன்றத்தை 14ஆம் திகதி கூட்டுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால இணங்கியிருந்தார்.

ஆயினும் அதற்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான உச்சக் கட்ட முயற்சியில் சபாநாயகர் கரு ஜயசூரிய இறங்கியிருந்தார். அவர் சர்வதேச நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறும் வலியுறுத்தினார். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனும் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு அரசுக்கு அழுத்தம் வழங்கினார்.

நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரும் அழுத்தங்கள் நாலா புறமும் இருந்து வலுத்த நிலையில் – பெரும்பான்மையை நிரூபிக்கும் முயற்சியும் பிசுபிசுத்துப் போனமையால் வேறு வழியின்றிச் சட்டத்தைக் கையில் எடுத்து நாடாளுமன்றத்தை நள்ளிரவு கலைத்தார் ஜனாதிபதி.

அரசின் இந்தமிஹ் திடீர் தீர்மானத்தால் கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## நான் திரும்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களே வேலைத்திட்டங்களை விரைவுபடுத்துங்கள். எனது கருத்தைத் தவறாக எடுத்துக் கொள்ளவேண்டாம். ஒரு நாள் பதவியில் இருப்பினும் மக்களின் நலன்களுக்காக அதைப் பயன்படுத்துவேன் எனவும் கூறினார்.

மீள்குடியேற்றம் மற்றும் வடக்கு அபிவிருத்தி, இந்து சமய விவகாரங்களுக்கான அமைச்சராகப் பதவியேற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்து போனினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடுகளை வழங்கினார்.

இந்த நிகழ்வு யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ,

இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்–

திரைப்படம் ஒன்றில் ஒரு நாள் முதலமைச்சர் காட்சியை பார்த்திருப்பீர்கள் அல்லது கேள்விப்பட்டிருப்பீர்கள். அதேபோல் ஒரு வினாடி எனக்கு கிடைத்தாலும் அதனை எனது மக்களுடைய நலன்களுக்காகவும், அவர்களுடைய நன்மைகளுக்கும், பாதுகாப்புக்கும் பயன்படுத்துவேன். மாறாக எனது சுயநலன்களுக்காகப் பயன்படுத்தமாட்டேன்.

இந்த அரசு தொடரும், எமது சேவை நீடிக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது. ஜனாதிபதியின் ஆசை விஞ்ஞானபூர்வமான அமைச்சரவை அல்லது அமைச்சர்கள் இருக்கவேண்டும் என்பது. ஆனால் கடந்த ஆட்சியில் அவருடைய ஆசை நிறைவேற்றப்படவில்லை. ஆனால் தற்போது அமைந்திருக்கும் புதிய ஆட்சியில் அவருடைய ஆசை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதனால் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி என்ற அமைச்சுத் துறையையும் எமக்கு வழங்கியுள்ளார். அந்த அமைச்சுத் துறையின் எல்லை என்பது வானமாக இருக்கும். நாம் மக்களுடைய நலன்களையும், இருப்புக்களையும் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கி செல்வதற்கான திட்டங்களுக்கு ஜனாதிபதி, பிரதமர் தங்களுடைய பூரணமான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளனர் எனக் கூறியுள்ளார்கள். – என்றார்.

இதேவேளை, அமைச்சராக பொறுப்பேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த டக்ளஸ் தேவானந்தாவை யாழ்ப்பாணத்தில் அலையென திரண்டு மக்கள் வரவேற்றனர்.

டக்ளஸ் தேவானந்தாவை வரவேற்கும் முகமாக யாழ் நகரப் பகுதிகளின் வீதியெங்கும் பதாதைகள் கட்டி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு பச்சை, மஞ்சள், சிவப்பு கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு வீதிகளெங்கும் விழாக்கோலமாக காட்சியளித்தன.

யாழ்ப்பாணம் வேம்படிச் சந்தியில் திரண்டிருந்த பெருந்திரளான மக்கள் டக்ளஸ் தேவானந்தாவைப் பெருங்கரகோசங்களுக்கு மத்தியில் பொன்னாடை போர்த்து மாலை அணிவித்து மகத்தான வரவேற்பளித்தனர்.

அதன் பின்னர் யாழ். மத்திய கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் வேம்படிச் சந்தியிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆயிரக் கணக்கான மக்கள் புடைசூழ வைத்தியசாலை வீதியூடாக ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு வைத்தியசாலை முன்றல், யாழ் மத்திய பஸ் நிலையம், பழக்கடை வியாபார நிலையம் ஆகிய இடங்களில் ஊழியர்களாலும் வர்த்தகர்களாலும் வரவேற்கப்பட்டார்.

தொடர்ந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்ட அவர் யாழ் நகரின் வர்த்தகர்களாலும் பொது மக்களாலும் பிரதான வீதியூடாக அழைத்துவரப்பட்டு ஸ்ரான்லி வீதியூடாக கட்சியின் தலைமையகத்தை அடைந்தார். அங்கும் அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. (ஐ)

## நாடாளுமன்றைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பளிங்கு போல தெளிவானவை. இதைத் தவறாக அர்த்தப்படுத்தி நாடாளு மன்றத்தைக் கலைப்பதை உயர் நீதி மன்றமும் தேர்தல் ஆணை யமும் ஏற்றுக் கொள்ளா.

– இவ்வாறு உறுதிபடத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன்.

நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் நாலரை ஆண்டுகளைத் தாண்டுவதற்கு முன்னர் அதனை ஜனாதிபதி கலைக்க முடியாது. அதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை என்பதை அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் தெளிவாகக் கூறுகின்றது. இது பளிங்கு போல தெளிவானது.

அப்படியிருக்க, நாடாளுமன்றத்தைக் கலைப்பதை உயர்நீதிமன்றம் எந்தக் கட்டத்திலும் ஏற்றுக்கொள்ளாது; அனுமதிக்காது.

ஒரேயொரு விடயம். இது தொடர்பான உத்தரவை நாம் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு சிறிது கால அவகாசம் தேவை.

நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெற முடியாமல் அல்லாடும் தரப்புகளுக்கு இந்தக் கால அவகாசம் ஓர் உதவியாக – வாய்ப்பாக – அமையக்கூடும்.

இப்படி நாடாளுமன்றத்தைக் கலைப்பது சட்டவிரோதமானது, அதனை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாது என்று தெரிந்தும் இதனைச் செய்பவர்கள் அதன் மூலம் சிறிது கால அவகாசமாவது தமக்குக் கிடைக்கும் என்று கருதியே இதனை முன்னெடுக்கின்றார்கள் போலும்.

வார விடுமுறையை ஒட்டி இதனைச் செய்தால், நீதிமன்றை நாடுவதற்கான நாள்கள் இன்னும் இரண்டு தினங்கள் பின்னால் போகும் என அவர்கள் கணக்கிட்டிருப்பார்கள் போலும்.

நாடாளுமன்றத்தைக் கலைத்தால் அது தொடர்பான உத்தரவை சவாலுக்கு உட்படுத்தும் தயார் நிலையில் பல டசின் கணக்கான தரப்புகள் தயாராக இருக்கின்றன.

– இவ்வாறு சுமந்திரன் நேற்றிரவு மேலும் தெரிவித்தார்.

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது என்று பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கீச்சகப் பதிவியில் தெரிவித்துள்ளதாவது:

தலைவர்கள் என்ற வகையில், இலங்கையின் வருங்காலத்தின் மீது தங்கள் கருத்துக்களை குரல்கொடுப்பதற்கான வாய்ப்பை மக்களுக்கு வழங்குவதற்கான நமது பொறுப்பு மற்றும் கடமையாகும். பொதுத் தேர்தல் உண்மையிலேயே மக்களின் விருப்பத்தை நிறுவும் மற்றும் ஒரு நிலையான நாட்டுக்கு வழிவகுக்கும் – என்றுள்ளது. (ஐ)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்குள் நேற்றிரவு பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள், வெளியில் செல்ல முடியாதவாறு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், நாடாளுமன்றை நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் கலைப்பது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு ஜனாதிபதியின் கையொப்பத்துடன், அரச அச்சகத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முட்டி மோதும் தறுவாயில் மஹிந்த – மைத்திரி தரப்புகள்

கொழும்பு, நவ. 10

ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சியில் இருந்து அகற்று வதற்காக ஒன்றிணைந்து மஹிந்த ராஜபக்ஷ தரப்பும், மைத்திரிபால சிறிசேன தரப்பும், அடுத்த கட்ட அரசியல் நகர்வு விடயத்தில் முட்டிக் கொள்ளத் தொடங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துவது குறித்து கடந்த புதன்கிழமை தீவிரமாக ஆராயப்பட்ட நிலையில், திடீர் தேர்தல் நடத்தப்பட்டால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுவதா, பொதுஜன முன்னணியில் போட்டியிடுவதா என்ற குழப்பம் தீவிரம டைந்தது.

தமது கட்சி தாமரை மொட்டுச் சின்னத்தில் மட்டுமே போட்டியிடும் என்று சிறிலங்கா பொதுஜன முன்னணியின் செயலர், சாகர காரியவசம், வெளியிட்ட கருத்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கடும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நாடாளுமன்றப் பகுதியில் கடந்த 5ஆம் திகதி நடத் தப்பட்ட பேரணியின்போது, தமது தரப்பினர் ஓரம் கட்டப் பட்டமை குறித்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் கவலையடைந்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயல ரான மஹிந்த அமரவீர, அந்தப் பேரணியில் பேசத் தயா ரானபோது, பொதுஜன முன்னணியின் தலைவர் ஒருவர், அவருக்கு வாய்ப்பு வழங்க மறுத்துள்ளார். இது தமது கட்சியின் பேரணி என்று அவர் கூறியிருக்கிறார்.

மஹிந்த அமரவீர மாத்திரமன்றி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் பேராசிரியர் றோகண லக்ஸ் மன் பியதாச, கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திசநாயக்க, மற்றும் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் எவ ரும், இந்தப் பேரணியில் உரையாற்ற அனுமதிக்கப்பட வில்லை.

இருந்தபோதிலும், பவித்ரா வன்னியாரச்சி, விமல் வீரவன்ஸ, றோகித அபேகுணவர்த்தன, உதய கம்மன் பில ஆகியோர் உரையாற்றியிருந்தனர்.

பேரணி நடந்தபோது, கோட்டே பகுதியில் காட் சிப்படுத்தப்பட்டிருந்த சுவரொட்டிகள், பதாதைகள் அனைத் திலுமே, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் படங்களே இருந்தன.

மஹிந்தவின் படைகள் மட்டுமே பங்கேற்ற அந்தப் பேரணியில் மைத்திரிபால சிறிசேன புறக்கணிக்கப்பட்டார்.



அதேவேளை, முன்னைய அரசுக்கு ஆதரவு அளித்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது குறித்து, மஹிந்த அமரவீரவிடமும், துமிந்த திசநாயக்கவிடமும் முறையிட்டுள்ளனர்.

புதிய அரசில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் என்ன உத்தர வாதம் அளிக்கப்பட்டுள்ளது என்று அறிந்து கொள்ள விரும்புவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டால், ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி அமைச்சர்கள், பொதுஜன முன்னணி யின் கீழ் போட்டியிட வேண்டியிருக்கும். அவர்களுக்குப் போட்டி யிட வாய்ப்பு அளிக்கப்பட்டாலும், திட்டமிட்டு அவர்கள் தோற்கடிக்கப்படுவார்கள் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் மஹிந்த அமரவீர, மஹிந்த ராஜபக்ஷ வின் முன்பாக மண்டியிட்டு வணக்கும் படம் ஒன்றைப் பசில் ராஜபக்ஷவின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உயர்நீதிமன்ற உத்தரவுக்குப் பின்பே தேர்தல் அறிவிப்பை வெளியிடலாம்

### தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 10

நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான உயர்நீதி மன் றின் கட்டளைக்குப் பின்னரே பொதுத் தேர்தல் தொடர்பான அறிவிப்புக்களை வெளியிட முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரி வித்தார் என்று சிங் கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.



2019ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்த ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்று செய்திகள் வெளியாகும் நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மீறி ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைத்துள்ளார். அதனால் ஜனாதி பதியின் வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக உயர் நீதிம ன்றில் மனுத் தாக்கல் செய்யப்படும்.

அந்த மனு மீதான உயர் நீதிமன்றின் கட்டளை வரும் வரை பொதுத் தேர்தல் தொடர்பான அறிவிப்புக்களை வெளியிடமுடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் குறிப்பிட்டார். (ஐ)

## வன்னிவிளாங்குளமும் உடைப்பெடுக்கும் ஆபத்து



வன்னிப் பகுதியில் பெய்து வரும் அடை மழையினால், குளங்களின் நீர்மட்டம் சடுதியாக அதிகரித்துள்ளதுடன் பல இடங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

வன்னிவிளாங்குளமும் உடைப்பெடுக்கும் ஆபத்து இருப்பதாக, விவசாய மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தெரியப்படுத்தியதை அடுத்து, 65 ஆவது டிவிசனைச் சேர்ந்த 57 இராணுவத்தினர், மண்மூடைகளைக் கொண்டு, பலவீனமாக இருந்த அணையைச் செப்பனிட் டுள்ளனர். (ஐ)

## குடியிருப்புக்குள் நுழைந்த முதலை



கிளிநொச்சி, நவ. 10

கிளிநொச்சி குளத்திற்கு அருகாமையில் உள்ள குடியிருப்புப் பகுதிக்குள் நுழைந்த முதலை பிடிக்கப்பட்டு, வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. நள்ளிரவில், மக்கள் குடியிருப்புக்களுக்குள் நுழைந்த முதலை, வீட்டில் வளர்க்கப்பட்ட கோழிகளைப் பிடித்து விழுங்கியுள்ளது.

நீண்ட முயற்சியின் பின்னர் முதலையைப் பிடித்த பொதுமக்கள், வனஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர். வெள்ளத்தில் முதலை குடியிருப்புக்குள் சென்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## ஓய்வூதியம் இழக்கும் தமிழ் எம்.பிக்கள்

கொழும்பு, நவ. 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அரசு பக்கம் தாவிய நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதி யத்தைப் பெறும் தகுதியை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாந்தி சிறிஸ்கந்தராசா, சிவமோகன், சார்ஸ் நிர்மலநாதன், சிறி நேசன் ஆகியோரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், காதர் மஸ்தான் ஆகியோரும் ஓய்வூதியத்தை இழக்கின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வர்த்தமானி அறிவிப்பு உயர் நீதிமன்றுக் குச் சென்று நீக்கப்படாமல் நடைமுறைப் படுத்தப்பட்டால் இவர்கள் ஓய்வூதியத்தை இழக்கும் நிலை ஏற்படும்.

அத்துடன், இவர்கள் மீளவும் நாடாளும ன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டால் ஓய்வூதியத்துக்கான காலத்துக்குள் இந்தக் காலப்பகுதியும் சேர்க்கப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினராக 5 ஆண்டுகள் நிறைவு செய்யாதோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை என்பது

A/L பொருளியல் 6
- அரசாங்கப் பொருளியல் -
புதிய பாடத்திட்ட நூல் : வர்ணப்பக்கங்களுடன்
வங்கியாளர் & போட்டிப் பரீட்சைகளுக்குமுரியது
A/L 2015, A/L 2016 பரீட்சைகளில் 99 புள்ளிகளும் 2017 A/L, 2018 A/L பரீட்சைகளில் 100 புள்ளிகளும் பெற வைத்த நூல்களின்
புள்ளிகள் 100 100
ஆசிரியர் வே.கருணாகரன்
ரூபா 350
பூபாலசிங்கம் புத்தகசாலை அன்னை புத்தகசாலை யாழ்ப்பாணம்
விநியோகத்தர்: லங்கா புத்தகசாலை (T.P.: 011 2341942) கொழும்பு - 12

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.